விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 17 திங்கட்கிழமை (03.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 319


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தேர்தல் அறிவிப்பின் பின்னே ஆதரவு குறித்துத் தீர்மானம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு) ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க....



சீனாவின், நீர்மூழ்கி, யுத்தக் கப்பல்கள் இலங்கைக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா கடந்த வாரம் வெளியிட்ட கரிசனைகளையும் மீறி சீனாவின் கடற்கலங்கள் மீண்டும் இலங்கை வந்துள்ளமை இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மாகாணசபை உறுப்பினர்களுக்கு இந்தியாவிலிருந்து வாகனங்கள்

### வரிவிலக்களிக்க அரசு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்தியா வழங்கும் வாகனங்களுக்கு வரிச்சலுகை அளிக்க இலங்கை மறுத்துள்ளது.

இதனால் இந்த மாத இறுதிக்குள் 7 வாகனங்களை வடக்குக்குக் கொண்டுவரத் தாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை கடந்த வருடம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியமைக்கப்பட்டது. இதில தெரிவான 38 உறுபபினர்களுககும் அன்பளிப்பாக வாகனங்களை வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்தது.

இந்த வாகனங்களுக்கான இறக்குமதி தீர்வையை நீக்குமாறு இலங்கை அரசை இந்திய அரசு கேட்டது. ஆனால இலங்கை அரசு அதனைக் காதில் வாங்கிக்கொள்ள வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது இறக்குமதி தீர்வையை தாமே செலுத்தி முதல் கட்டமாக 20 ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்து மாணவன் பலி



(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம 20 ஆம் பக்கம் பார்க்க....

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## தென்னிலங்கையில் கடற்கொந்தளிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை கடற்பரப்பில் அலைகள் கடும் சீற்றத்துடன் காணப்படுவதால் கடற்கொந்தளிப்புக்கான அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை அவதான நிலையமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று அதிகாலை முதல் காலி தொடக்கம் பொத்துவில் வரையான கடற்பரப்பில் பாரிய அலைகள் கடும் சீற்றத்துடன் காணப்படுவதாக மீனவர்கள் தெரி 20 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதித் தேர்தலில் ஷிராணி பண்டாரநாயக்க !



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு மாதுளுவாவே சோபித தேரரின் நீதியான சமூகத்துக்கான இயக்கம் கேட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வேறுசில கட்சிகளும் அவரிடம 20 ஆம் பக்கம் பார்க்க....

## சாட்சியங்களை சமர்ப்பிக்க கால அவகாசம் அறிவிப்பு!

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவிற்கு சாட்சியமளிக்கும் கால அவகாசம் முடிவடைந்த போதிலும், சாட்சியங்களை அளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய கால வரையறையின் பின்னரான சாட்சியங்களையும் ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்என ஐக்கிய நாடுகள் [illegible] தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 30-ம் திகதியுடன் சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை பூர்த்தியாகின்றது. சாட்சியமளிப்பதற்கான கால வரையறை உத்தியோகபூர்வமாக மீள நீடிக்கப்பட மாட்டாது என அறிவித்துள்ளது.

எனினும், சாட்சியங்கள் அளிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள வழிவகைகள் செய்யப்படும் என தெரிவிக்கப [illegible] 20 ஆம் பக்கம் பார்க்க....

## மற்றொரு சடலம் மீட்பு தோட்டப்பாதை கண்டுபிடிப்பு

(கொஸ்லந்தை)

கொஸ்லந்தை - மீரியபெத்த தோட்டத்திற்கு பயணிக்கப் பயன்படுத்தப்பட்டபாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மீரியபெத்த பகுதியில் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட்டு வருகின்றன.

இதன்படி மண்ணினால் மூடப்பட்டிருந்த மீரியபெத்த தோட்டத்திற்கு பயணிக்கும் பாதையை கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மண் சரிவு இடம் பெற்ற இடத்திலிருந்து மற்றுமொரு சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தற்பொழுதுவரை மண்சரிவுக்குள் அகப்பட்ட மொத்தம் 6 பேருடைய சடலங்கள் மீட்கபபட்டுள்ளன.

நேற்று மீட்கப்பட்டுள்ள சடலத்தை அடையாளம் காண்பதற்காக பிரதேச வாசிகளின் உத 20 ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் புலி உறுப்பினர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கட்டாரில் தொழில் செய்து விட்டு நாடு திரும்பிய திரு கோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவர் கட்டார் நாட்டுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்யும் முயற்சியில் தேவியன், கோபி ஆகியோருடன் தொடர்பில் இருந்ததாகவும் பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தொடர்புகள் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவரிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழக மீனவர்கள் சார்பில்
# மேன்முறையீடு செய்வதற்கு ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர்

(சென்னை)

இலங்கையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐந்து தமிழக மீனவர்களின் சார்பில் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டை செய்வதற்கான வழக்கறிஞராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சட்ட ஆலோசகர் அனில் சில்வாவை இந்தியா நியமித்துள்ளது.

இந்த நியமனம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து தமிழக மீனவர்களின் தண்டனையை எதிர்த்து வாதாடுவதற்காக ஜனாதிபதியின் உயர்மட்ட சட்ட ஆலோசகராக உள்ள வழக்கறிஞர் அனில் சில்வாவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது. இந்த நியமனம் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் வழக்குத் தொடர்பான தீர்ப்பின் நகல் இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நகல் கிடைத்தவுடன் இலங்கை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும்.

எனவே, தற்போது தமிழகத்தில் வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தங்களது போராட்டத்தை கைவிட வேண்டும் என இந்த அறிக்கையில் தமிழக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, இவ்வழக்கில் இலங்கையைச் சேர்ந்த மூன்று மீனவர்களுக்கும் கொழும்பு உயர்நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்திருந்தது.

இந்நிலையில், அவர்களுக்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இந்த மூன்று மீனவர்களின் உறவினர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் மனு வொன்றைக் கையளித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் எட்டுப் பேருக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டமை தெரிந்ததே. (எ-8)

## சீமான் எச்சரிக்கை



போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில், கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஐவரையும் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்ய வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று அறிவித்து விடுதலை செய்யாவிட்டால் தேவையற்ற பின்விளைவுகள் ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் குமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாள் விழா பொதுக்கூட்டம் மேல்புறம் சந்திப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்ததாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலகங்களுக்கான சாரதி வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தந்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி **அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும் **அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ் (கிருபன்)** (EPDP அமைப்பாளர், முல்லை மாவட்டம்) அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் இன்னும் பல சேவைகளைச் செய்து மேன்மேலும் உயர்வடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8229)

வாழ்த்துவோர் :
R.சிறிசங்கர் (செம்மலை), M.ஜேசுதாஸ் (குமுழமுனை),
N.மகேந்திரன் (முள்ளியவளை), N.திருச்செல்வம் (முள்ளியவளை)



## விற்பனைக்கு

எம்மிடம் நகைக் கடை கவுண்டர் சோகேஸ், பலசரக்கு கடை சோகேஸ் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**021 320 5743**
(காலை 9 மணி தொடக்கம் மாலை 6 வரையும் தொடர்பு கொள்ளலாம்)
இடம்: நெல்லியடி

(C-8917)


## மரண அறிவித்தல்



### தம்பியப்பா பரஞ்சோதி (சோதி)

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்- யோகபுரம், மல்லாவி)

மண்டைதீவு 08 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா-பரஞ்சோதி சனிக்கிழமை (01.11.2014) அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-வேதநாயகி தம்பதியரின் அருமை மகனும், குணேஸ்வரியின் (குணம், பிரம்மகுமாரி) அன்புக் கணவரும், யசோதரன் (உள்ளூராட்சி திணைக்களம் வட மாகாணம்), காலஞ்சென்ற ஜமுனா (பிரம்மகுமாரி முன்னாள் ஆசிரியை கொட்டாஞ்சேனை தமிழ் வித்தியாலயம்), மற்றும் பகீதரன் (லண்டன்), சிறீதரன் (கனடா), மிதுனா (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தில்லைநாயகம் மற்றும் சக்திவேல், தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்-அருணோதயக் கல்லூரி), காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தெட்சணாமூர்த்தி (முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்) மற்றும் சிதம்பரநாதன் (ஓய்வுநிலை திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்), காங்கேசபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்-பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், லோஜினி (நிர்வாக அலுவலர், கல்வி வலயம், தென்மராட்சி சாவகச்சேரி), மதுமதி (லண்டன்), வளர்மதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, அன்னலட்சுமி, புஸ்பவதி (பவளம்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தியாகேஸ்வரி, ஜோதீஸ்வரி, ஜெயந்தி, நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை-யாழ் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்றவர்களான படிகலிங்கம், திருநீலகண்டன் ஆகியோரின் மைத்துனரும், அமரர் சண்முகத்தின் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்-கச்சேரி, மன்னார்) சகலனும், மிதுஷன் (அவுஸ்திரேலியா), தனிஷா (லண்டன்), தர்ஷனா (லண்டன்), வருண் (கனடா), கவீன் (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.11.2014 புதன்கிழமை அன்று நீர்கொழும்பு குமாரி மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 12 மணிக்கு இறுதிக் கிரியைகள் யாவும் நடைபெற்று நீர்கொழும்பு பொது மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

2/20, மொறாச் ஸ்கீம் (Moras scheme)
கடோற்கல வீதி,
நீர்கொழும்பு.

தகவல் :
குடும்பத்தினர்
தொ.பே: [illegible]

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
### அன்பான அவசர வேண்டுகோள்

கடந்த கிழமை மலையகத்தில் நடைபெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விதத்தில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினர் உலர் உணவு, உடைகள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வழங்கி உதவ உள்ளோம். அதற்குத் தேவையான பொருட்களை எல்லா அந்தணர்களும் மற்றும் பொதுமக்களும் கீழ்க் குறிப்பிட்ட பிரதேச ரீதியான முகவரியில் 04.11.2014 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கொடுத்து உதவவும்.

01. வடமராட்சி - சிவஸ்ரீ ராம் சபாநாதக் குருக்கள்
சாரதாபீடம் அல்லையம்பதி
முருகன் ஆலயம் துன்னாலை.
→ சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள்
வீரபத்திரர் கோயிலடி,
அல்வாய் வடக்கு.

02. வலிதெற்கு - கதிரமலை சிவன் கோயில்
சுன்னாகம்.

03. கோப்பாய் - சிவஸ்ரீ சண்முகராஜ குருக்கள்
கண்ணகை அம்மன் கோயில்,
கோப்பாய் மத்தி.

04. வலிமேற்கு காரைநகர்- சிதம்பரேஸ்வரர் ஆலயம்
சித்தன்கேணி.

05. தென்மராட்சி- பிரம்மஸ்ரீ மயூரன் சர்மா
நுணாவில் வளைவேலி மேற்கு,
சாவகச்சேரி.

06. நல்லூர் - சிவஸ்ரீ சோம உமாரமணக்குருக்கள்
சட்டநாதர் கோயில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.
↘ சிவஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்கள்
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.

07. யாழ்ப்பாணம் - பிரம்மஸ்ரீ கா.சதானந்தசர்மா
சிவலிங்கப்புளியடி கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

08. வலிதென்மேற்கு - கு.சோமாஸ்கந்த குருக்கள்
சீரணி நாகம்மாள் கோவில் வீதி,
சண்டிலிப்பாய்.

09. தீவகம் - சிவஸ்ரீ ம.பிரபாகரக்குருக்கள்
முடிப்பிள்ளையார் கோவில், வேலணை.

(சி-8949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்து

## 14 பேர் படுகாயம்

(கொழும்பு)

கடற்படையினரின் வாகனம் ஒன்று வீதியை விட்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 14 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் களுத்துறை மாவட்டத்தில் மீகஹகிவுள, லிஹிணியாகம என்ற இடத்தில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

கடற்படையினரை ஏற்றிக் கொண்டு அதிவேகத்தில் பயணித்த வாகனமொன்றே சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது வீதிக்கு அருகில் இருந்த வீடு ஒன்றின் மீதும் கடற்படை வாகனம் மோதியதன் காரணமாக, வீடு சேதமடைந்துள்ளது.

காயமடைந்த கடற்படையினரை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த மீகஹகிவுள பொலிசார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ)


## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8890)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம்

### பட்டமேலங்கிகள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் நவம்பர் 10 ஆம் , 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கான பட்டமேலங்கிகளை 04.11.2014 ஆம் திகதியிலிருந்து கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

★ பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை

★ உயர் கல்வி அமைச்சின் கேள்விக் கொத்தினைக் கீழுள்ள அலுவலகங்களில் பெற்று அல்லது www.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ புகைப்படம் மற்றும் DVD யினைப் பெறுவதற்கு ரூபா 250 /- இனை மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையில் (கணக்கு இலக்கம்: 1621001 60000880) வைப்புச் செய்த பற்றுச் சீட்டு.

| | | |
|---|---|---|
| 01 | கலைப்பீடப் பட்டதாரிகள்<br>★ சட்டமாணி, இராமநாதன் நுண்கலை அலகுப் பட்டதாரிகள்- 04.11.2014<br>★ சிறப்புக் கலைமாணி- 05.11.2014, 06.11.2014<br>★ பொதுக் கலைமாணி- 07.11. 2014 | கலைப்பீடாதிபதி அலுவலகம் |
| 02 | மருத்துவபீட பட்டதாரிகள் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகள் | மருத்துவபீடாதிபதி அலுவலகம் |
| 03 | விவசாயபீட பட்டதாரிகள் | விவசாய பீடாதிபதி அலுவலகம், திருநெல்வேலி |
| 04 | முகாமைத்துவபீடப் பட்டதாரிகள் | முகாமைத்துவ பீடாதிபதி அலுவலகம் |
| 05 | விஞ்ஞானபீட பட்டதாரிகள் | விஞ்ஞானபீடாதிபதி அலுவலகம் |
| 06 | சித்த மருத்துவ அலகு பட்டதாரிகள் | சித்த மருத்துவ அலகு அலுவலகம், கைதடி |
| 07 | பட்டமேற்படிப்பு பட்டதாரிகள் | உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி அலுவலகம் |
| 08 | வவுனியா வளாக பட்டதாரிகள் | வவுனியா வளாக முதல்வர் அலுவலகம். |

குறிப்பு:- கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பட்ட மேலங்கி வழங்கப்படும்.

பதிவாளர்.

(சி-8947)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம்

### நவம்பர் 10, 11 ஆம் திகதி 2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் நவம்பர் 10 ஆம் , 11 ஆம் திகதிகளில் நடைபெறும். பட்டமளிப்பு நிகழ்வானது பின்வரும் அமர்வுகளை உள்ளடக்கியதாக அமையும்.

| திகதி | அமர்வு 1 (மு.ப.9.00) | அமர்வு 2 (மு.ப.10.45) | அமர்வு 3 (பி.ப.2.00) | அமர்வு 4 (பி.ப.3.30) |
|---|---|---|---|---|
| 10.11.2014 | M.Phil (Bio chemistry)<br>M.Phil (Nursing)<br>MBBS<br>BSc in Nursing<br>BSc in MLS<br>BSc. in Pharmacy<br>LLB<br>BSc in Agriculture | MPhil (Geography)<br>BFA<br>BA (General) | PhD (Management)<br>MPhil (Tamil)<br>BAd<br>BA (General) | MSc (Environment)<br>PGD in Env. Mag<br>BSc<br>BSc(Com.Sc)<br>BCS<br>BA (General) |
| திகதி | அமர்வு 5 (மு.ப.9.00) | அமர்வு 6 (மு.ப.10.45) | அமர்வு 7 (பி.ப.2.00) | அமர்வு 8 (பி.ப.3.30) |
| 11.11.2014 | BBM (General & Special)<br>BSc in Applied Mathematics & Computing)<br>BICT<br>BSc in ICT<br>BSc in Environmental Science<br>PGDE(Vavuniya Centre)<br>BSMS (Siddha) | MPhil (Christianity)<br>BA (Special) | MPhil (Geography)<br>BA (Special) | MPhil (Education)<br>PGDE (Jaffna Centre) |

***முக்கிய குறிப்பு:-*** கலைப்பீட பட்டதாரிகள் தங்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அமர்வுகளின் விபரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் கலைப்பீட அலுவலகத்திலும் பார்வையிடமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/ கல்விக்கிளை, தொலைபேசி இலக்கம் 021 222 6500 என்ற இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

(சி-8947)

பதிவாளர்.

## இராசி பலன்

03.11.2014
(ஐப்பசி 17, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 11.24 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.46 மணிவரை
இராகுகாலம் 7.34- 9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
உத்தான ஏகாதசி விரதம்

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**கடகம்:** சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், தடைப்பட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்து கொள்வது நல்லது, தேக நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** சுற்றத்தாரின் வரவால் சுகம் காண வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், தொழிலில் புதிய வழிமுறையைக் கையாள்வீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், தொலை [illegible]

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் காட்டுவீர்கள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கைகள் நடை பெறலாம், சகோதர வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மகரம்:** அரசியலில் செல்வாக்கு மேலோங்கும் நாள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், பிற இனத்தவரால் பொருட்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும்.


**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், திட்டமிட்ட பயணமொன்றில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரம் செய் சூழல்; இலங்கை பின்னடைவு

2013 -2014 காலப்பகுதியில் வியாபாரம் முன்னெடுக்கக்கூடிய சூழல் நிலவுகின்றமை தொடர்பிலான தரப்படுத்தலில் இலங்கை 85-ம் நிலையிலிருந்து 99 ஆம் நிலைக்கு பின்னடைந்துள்ளது. உலக வங்கி குழுமத்தின் மூலமாக உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்த தரப்படுத்தலில் இலங்கை இவ்வாறு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.




"வியாபார முன்னெடுப்பு 2015" எனும் உலக வங்கியின் அறிக்கைக்கு அமைவாக, 189 நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் காணப்படும் நீதி மற்றும் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் வியாபாரங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு சாதகமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும், வியாபாரங்களுக்காக அறவிடப்படும் வரி உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் வியாபாரத்தை முன்னெடுக்க மிகவும் மோசமான நாடாக டுனீசியா அமைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# பங்குச்சந்தை முதலீடு தொடர்பில் கருத்தரங்கு


கொழும்பு பங்குச்சந்தை அண்மைக் காலமாக உயர் பெறுமதிகளைப் பதிவு செய்த வண்ணமுள்ளது. வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைவடைந்துள்ள நிலையில், கொழும்பு பங்குச்சந்தையில் முதலீடுகளை மேற்கொண்டு, சிறந்த இலாபத்தை தேடிக் கொள்வது எவ்வாறு என்பது குறித்து விளக்கங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய இலவச கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 8-ம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த கருத்தரங்கின் போது பொருளாதாரத்தின் பணவீக்கப் போக்கும், வட்டி வீதக்கொள்கைகளும், பங்குச்சந்தையும், புதிய வரவு செலவுத்திட்ட (2015) அறிமுகமும், பங்குத் தெரிவுகளும் பொருத்தமான தீர்மானமும், பங்குச்சந்தையின் போக்கும், அதன் நிலைத்திருக்கும் சந்தர்ப்பங்களும், பொதுவான தவறுகளும் அதனைத் தவிர்க்கும் வழிமுறைகளும் போன்ற விடயங்களை அறிந்து கொள்ள முடியும்.

கொழும்பு பங்குச்சந்தையின் யாழ்ப்பாண கிளைக் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி முதல் இடம்பெறவுள்ள இந்த கருத்தரங்கில் இலங்கை நம்பிக்கை அலகுகள் நிதியத்தின் அதிகாரியான பி.அசோகன் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கவுள்ளார்.

மேலதிக விபரங்களை கொழும்பு பங்குச்சந்தை- யாழ் கிளை: கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், 0212221455 அல்லது 0777822014 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

# சிறந்த வர்த்தக நாமம் வெல்வட்டுக்கு விருது



இலங்கையில் முதலிடத்திலுள்ள அழகுச் சவர்க்காரமான வெல்வட், அண்மையில் இலங்கையின் சந்தைப்படுத்தல் நிறு t d SLIM வர்த்தக நாம சிறப்பு விருது விழா 2014 இல் ஆண்டிற்கான சிறந்த வர்த்தக நாமம் விருது உட்பட மூன்று தங்க விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது.

மேலும் வெல்வட் வர்த்தக நாமமானது ஆண்டிற்கான சிறந்த உற்பத்திக்கான வர்த்தகநாமம் மற்றும் ஆண்டிற்கான உள்நாட்டின் சிறந்த வர்த்தகநாமம் ஆகிய பிரிவுகளிலும் தங்க விருதுகளை வெற்றிப் பெருமிதத்தோடு பெற்றுக் கொண்டது.

இலங்கையின் முதல் தர அழகுச் சவர்க்காரமான வெல்வட், கடந்த 9 ஆண்டுகளாக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக நாமங்களுக்கு சிறந்த போட்டியை வழங்கி கடுமையான போட்டி நிலவும் அழகுச் சவர்க்கார சந்தையில் முன்னணியிலுள்ள தயாரிப்பாக விளங்குகிறது.

உள்நாட்டு தயாரிப்பு சந்தைப் படுத்தலில் ஈடுபட்டு வரும் எமது கடின உழைப்பு மற்றும் உந்துசக்திக்கு கிடைத்த அங்கீகாரமும், நடுவர்களினால் கௌரவிக்கப்பட்டமையும் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம் என ஹேமாஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட வர்த்தக நாம முகாமையாளர் அனுஷ்கா சபாநாயகம் தெரிவித்தார்.

ஹேமாஸ் நிறுவனம் பற்றி: ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனமானது சுகாதார பராமரிப்பு, துரித நகர்வு நுகர்வு பொருட் கள், போக்குவரத்து மற்றும் பொழுது போக்கு ஆகிய 4 பிரதான துறைகள் மீது கவனம் செலுத்தி வரும் பெருநிறுவனமாகும்.

## மைக்ரோசொப்ட் முடிவு

தங்களது லூமியா கைத் தொலைபேசிகளில் இருக்கும் நொகியா என்ற பெயரை நீக்க மைக்ரோ சொப்ட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு, 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நொகியாவை மைக்ரோ சொப்ட் வாங்கியது. ஆனால் நொகியா என்ற பெயரைத் தொடர்ந்து பயன்படுத் துவது குறித்து ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

புதிதாக பதவியேற்றுள்ள மைக்ரோ சொப்டின் தலைமை அதிகாரி சத்யா நடெல்லா மைக்ரோ சொப்டின் தொலைபேசி தயாரிப்பை பெரியளவில் கட்டுப்படுத்தியுள்ளார்.

## வான்களின் விலை வீழ்ச்சியடையும்

வரவு செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வரி திருத்தங்களினால், வான்களின் விலை சுமார் 10 இலட்சத்தினால் வீழ்ச்சியடையும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

வாகன இறக்குமதியின் போது காணப்பட்ட 5 வரிகளுக்கு பதிலாக இம் முறை வரவு செலவுத் திட்டத்தில் உற்பத்தி வரி ஒன்று, மாத்திரமே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக வேன் இறக்குமதிக்காக அறவிடப்பட்ட 152 வீத வரி 98 வீதமாக குறைவடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏனைய ரக வான்களின் விலை 5 தொடக்கம் 10 இலட்சம் வரை வீழ்ச்சியடையும் என்று இந்திக சம்பத் மெரிங்சிகே மேலும் தெரி வித்தார்.

இதே போன்று சிறிய வாகனங்களுக்கான விலைகளும் வீழ்ச்சியடையும் என்று வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும் பெரும்பாலான வாகனங்களின் விலையில் பாரிய மாற்றங்கள் காணப்படவில்லையென வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## DHL அதிகாரி நியமனம்




உலகின் முன்னணி சர்வதேச பொருட்கள் விநியோக சேவை வழங்குநரான DHL Express, செப்டெம்பர் மாதம் 15-ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியாக திமித்ரி பெரேராவை நியமித்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கை செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியாக பணியாற்றிய மனிஷ் பட்டேல், பிராந்திய பொறுப்பை ஏற்று சிங்கப்பூருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை தொடர்ந்து இந்த புதிய நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இந்த புதிய பதவியை பெற்றுக் கொள்ளும் முன்னர், திமித்ரி, DHL Express Sri Lanka இல் தேசிய வியாபார முகாமையாளராக பணியாற்றியிருந்தார்.

இலங்கைச் செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி எனும் பதவிக்கு பெருமளவு அனுபவத்துடன் நியமிக்கப்பட்டுள்ள திமித்ரி, கடந்த 3 ஆண்டுகளில் உறுதியான விற்பனை பெறுபேறுகளை பதிவு செய்துள்ளார்.

# வட-கிழக்கில் மஹாபொல பிரசார ஊக்குவிப்பு

150 மில்லியன் ரூபா வரை வாராந்தம் பணப்பரிசுகளை வழங்கும் புதிய லொத்தர் சீட்டான, மஹாபொல லொட்டோ, நாடு முழுவதும் முன்னெடுக்கும் லொட்டோ விழிப்புணர்வு செயற்திட்டத்தின் மறுமொரு அங்கத்தை இலங்கையின் வடக்கு கிழக்கு நகரங்களில் முன்னெடுத்திருந்தது.

"உங்கள் அதிர்ஷ்ட இலக்கங்களை தெரிவு செய்யுங்கள்" எனும் வகையில் லொட்டோ கொள்கை மற்றும் தொழில்நுட்பம் என்பன யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தமது அதிர்ஷ்டத்தை பரிசோதிப்பதில் அதிகளவு ஆர்வமானவர்கள், தமக்கு பிடித்தமான இலக்கங்களை தெரிவு செய்து, லொட்டோ இயந்திரங்களின் மூலமாக தமக்குரிய மஹாபொல லொட்டோ டிக்கட்களை பிரதி எடுத்திருந்த னர்.

கடந்த செப்டெம்பர் மாதமையப் பகுதியில் 5 நாட்கள் வரை இடம்பெற்ற இந்த இந்த மஹாபொல லொட்டோ லொத்தர் தெரிவு நிகழ்வில் மஹாபொல லொட்டோ ஊழியர்கள், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த விநியோகத்தர்கள் ஆகியோர் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் பங்கேற்று வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் வகையில் ரீ-சேர்ட்கள், மக் வகைகள் மற்றும் தொப்பிகள் போன்றவற்றை அன்பளிப்புகளாக வழங்கியிருந் தனர்.

டிக்கட் விற்பனையின் மூலம் பெறப்படும் தொகையின் ஒரு பகுதியை மஹாபொல நம்பிக்கை நிதியத்துக்கு வழங்குவதன் மூலமாக, உயர் கல்வி நடவடிக்கைகளுக்கும் மஹாபொல லொட்டோ பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# சாம்சங் விற்பனையில் வீழ்ச்சி

மொபைல் போன் சந்தையில் முன்னணியில் உள்ள நிறுவனங்களில் ஒன்று சாம்சங் நிறுவனமாகும். இந்நிலையில, இந்தியா மற்றும் சீனாவிலும் குறைந்த விலையில் வித, விதமான மொபைல் போன்கள் விற்பனைக்கு வந்துள்ளது.

இதன் காரணமாக சாம்சங் நிறுவனம் நடப்பு ஆண்டு தொடக்கம் முதலே விற்பனையில் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. சர்வதேச அளவில் மொபைல் போன் சந்தையில் அவ்வப்போது நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப நாங்கள் மாறாததால் தான் விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது என்று அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதை ஈடுகட்டும் வகையில் புதிய யுக்திகளை கையாளவும், புது வகையான மொபைல்களை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த நிறுவனம் சுட்டிகாட்டியுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,213.48 | 7,326.81 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4003.79 | 4,087.38⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 11,400.775

**உயர்ந்தபங்குகள்** செரண்டிப் இன்ஜி.(114.60),மொரிசன்(355.00),போகலகாபைட்(31.10),மொரிசன்(X)(263.60),வலிவல்(7.50).

**சரிவடைந்த பங்குகள்** லங்கா சென்ச்ரி(W) (0.10),பரகன்(650.00), எஸ்.எம்.பி.லீசிங்(X)(0.50),ஹப்புகதேன்(36.00),பின்லே கொழும்பு(353.70)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.50 | 132.38 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.41 | 212.32 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.23 | 167.56 |
| சுவிஸ் பிராங் | 134.44 | 139.32 |
| கனேடிய டொலர் | 115.05 | 118.93 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.39 | 117.71 |
| சிங்கப்பூர் டொலர் | 100.83 | 104.13 |
| ஜப்பான் யென் | 1.17 | 1.21 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை வெடிக்கும் முன்னர் இந்திய அரசு செயற்படட்டும்

## கி.வீரமணி தெரிவிப்பு

தமிழக மீனவர்கள் ஐவருக்கு இலங்கை நீதிமன்றம் அளித்த தண்டனையை இரத்து செய்ய இந்திய அரசு உண்மையாக துரிதமாக செயற்பட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2011 நவம்பர் 28 அன்று இராமேஸ்வரத்தில் இருந்து 712 விசைப்படகுகள் கடலுக்கு சென்றன. அன்றிரவு கச்சதீவு அருகே நூற்றுக்கும் அதிகமான விசைப்படகுகள் மீன்பிடித்துக் கொண்டிருந்தன. அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், தங்கச்சிமடத்தை சேர்ந்த கிளாடுவின் படகில் சென்ற மீனவர்கள் எமர்சன், பிரசாந்த், வில்சன், அகஸ்டஸ், லாங்லைட் ஆகியோரை சிறைபிடித்துச் சென்றனர்.

பிடித்துச்சென்ற போது இலங்கை கடற்படை சார்பில் எல்லை கடந்ததாக உங்களைக் கைது செய்து இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகத்தான் தெரிவிக்கப்பட்டது, இது குறித்து அகஸ்டிஸ் என்பவர் தமிழகத்தில் உள்ள தனது உறவினரிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சிறை பிடித்துச் சென்ற மீனவர்கள் 5 பேரும் நெடுந்தீவு கடற்படை முகாமில் 2 நாட்கள் தங்க வைக்கப்பட்டனர். அப்போது அவர்களிடம் சிங்கள மொழியில் உள்ள சில ஆவணங்களில் கையெழுத்து வாங்கப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் இலங்கை ஊர்க்காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நரேந்திரமோடி பதவியேற்பு விழாவுக்கு வருவதற்குமுன் இப்பொழுது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் ஐவரையும் அன்று 'விடுதலை' செய்வதாக அறிவித்தாரே மகிந்த ராஜபக்ஷ - அது என்னாயிற்று? (26.5.2014) பிரதமர் மோடி பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி பங்கேற்கக் கூடாது - அவரை அழைக்கக் கூடாது என்று தமிழ்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பைத் திசை மாற்ற ஏமாற்றிட அந்த அறிவிப்பா?

இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டில் மட்டுமல்ல - உலகம் முழுவதும் உள்ள தமிழர்களையும் கடந்து மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அளவுக்கு அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் இந்திய அரசு தொடர்ந்து காட்டி வரும் அலட்சியப் போக்கு - எவ்வளவு பெரிய விபரீதமான விலையைக் கொடுக்க வைத்துள்ளது என்பதை நினைத்தால் வேதனையும், கோபமும் பீறிட்டுக் கிளம்புகின்றன. தமிழக மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை என்பது இந்திய அரசை அச்சுறுத்தவே என்பதில் ஐய மில்லை.

என்ன செய்யப் போகிறது மத்திய அரசு? தமிழ்நாடே கட்சிகளை மறந்து பொங்குமாக் கடலாக பொங்கி எழுந்து விட்டது - அரசு ரீதியாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

இன்னும் இராஜதந்திரம்தானா? வெளிநாட்டுப் பிரச்சினை என்ற நெளிவு சுளிவுக்குள் பதுங்கிக் கொள்ளப் போகிறதா?

மக்கள் எரிமலை வெடிக்குமுன் மத்திய அரசு விரைந்து செயற்படட்டும்! செயற்பட வும் வேண்டும். இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1980 RC
நட்சத்திரம்: உத்தரட்டதி
கி.பா: 28 உயரம்: 6'2"
தகைமை/தொழில்: BSC, MSC/ தனியார் வேலை
தொ.இ: B/3758

பிறப்பு: 1983 NONRC
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 178cm
தகைமை/தொழில்: பட்டதாரி/ கணக்காளர்
தொ.இ: B/3759

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 21 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.COM, HNDA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: B/3760

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 70 செவ் இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ அலுவலக ஊழியர்
தொ.இ: B/3761

**மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 50 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: G/3784

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 23
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/தாதி
தொ.இ: G/3786

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA/ வங்கி உத்தியோகம்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3788

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 37 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/3791

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



**விசேட சலுகை**

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறை வினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:-
021 2217 603,
021 5671 532
Valampuriijaffna@gmail.com



யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர்

**உயர்திரு.செ.சேதுராஜா**

அவர்களின்

தன்னலமற்ற சேவைக்கு மதிப்பளித்துக் கௌரவிக்கும் வண்ணம் கல்லூரிச் சமூகத்தினர் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்தெடுக்கும்

**மணிவிழா**

காலம் : 2014.11.06, வியாழக்கிழமை மு.ப.9.00 மணி
இடம் : கல்லூரிக் கலையரங்கு




அதிபர் அவர்களின் அபிமானிகள், கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

மணிவிழா ஏற்பாட்டுக் குழுவினர்

(சி-8948)





யா/செங்குந்த இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது நிகழ்வின் விருந்தினர்கள் மேடையில் அமைந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். இந்திய துணைத்[illegible] மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டமாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்திலிருந்து மீனவர்களை காத்தருள்க போப்பாண்டவருக்கு உறவினர்கள் மகஜர்



மரண தண்டனை தீர்ப்பை குறைத்து மீனவர்கள் மூவருக்கும் கருணை காட்டி தம்மோடு இணைந்து வாழ ஆணை செய்யுமாறு கோரிக்கை விடுத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அண்மையில் கொழும்பு மேல் நீதி மன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று மீனவர்களின் குடும்பத்தினர் உட்பட பொதுமக்கள் ஒன்று திரண்டு யாழ்.ஆயர் இல்லம் ஊடாக புனித போப்பாண்டவருக்கு நேற்று முற்பகல் மகஜர் கையளித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த குருநகர், மண்டைதீவு பகுதியில் வசித்து வந்த மீனவர்களான ஞானப்பிரகாசம் துசாந்தன் (வயது 27), முத்துராசா கமல் கிறிஸ்டியன் (வயது -38) கிறிஸ்துராசா கில்மட் ராஜ் (வயது 28) ஆகிய மூவரும் மீன் பிடிக்கச் சென்ற வேளை போதைப் பொருள் கடத்தல் தொடர்பான வழக்கில் பிடிபட்ட நிலையில் கடந்த 30.10.2014 அன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பால் நாம் மிகவும் அதிர் ச்சியுற்ற நிலையில் மதிப்பிற்குரிய தங்களுக்குஅறியத்தருவது யாதெனில்,

கடந்த 2011.11.28 அன்று மேற்கூறப்பட்ட மூவரும் மீன்பிடிக்கச் சென்ற வேளை போதைப்பொருள் கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்



றில் கொண்டு வரப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைத்திருந்து பின்னர் கொழும்பிற்கு கொண்டு சென்று 6228-12 எனும் வழக்கு இலக்கில் பதிவு செய்து காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மூன்று வருட காலமும் இவர்களை வெளியே கொண்டு வர பல முயற்சிகள் செய்து பல இலட்சம் ரூபாவை செலவழித்தும் முடியாமற்போன நிலையில் இன்று இத் தீர்ப்பினால் எமது குடும்பங்கள் மிகவும் வேதனையோடு உள் ளோம்.

குடும்பத்தலைவன் இன்றி நாமும் பிள்ளைகளும் மிகுந்த துன்பத்தை அனுபவிக்கின்றோம். எமது குடும்பத்தில் வேறு யாருமே வேலைக்கு செல்ல முடியாது கல்வி பயில்கின்றனர். எமதுகுடும்பவிபரத்தை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஞா.துசாந்தன் அவருடைய மகள் து.சாருஜன் (வயது 03) அடுத்ததாக மு.கிறிஸ்ரியன் அவருடைய பிள்ளைகள் செந்துயா (மகள்) வயது 17, துஸ்யந்தன் (மகன்) வயது 13, செசானா (மகள்) வயது 07 அடுத்து கி.கில்மட்ராஸ் அவரின் பிள்ளை கி.கிபிசன் (மகன்) வயது 04.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட மூவருக்கும் சிறு பிள்ளைகள் என்பதால் மிகுந்த துன்பத்தையும் கவலையையும் அனுபவிக்கின்றோம். நாமும் பிள்ளைகளும் கதியற்று நிற்கின்றோம். இலங்கை நீதித்துறையை நாம் பெரிதும் மதிக்கின்றோம். ஆயினும் மரணதண்டனை என்ற அவர்களின் தீர்ப்பு எங்களை ஆழ்ந்த துயரத்திற்குள் இட்டுச் சென்றுள்ளது.

எனவே மதிப்பிற்குரிய திருத் தந்தை அவர்களே! எங்களின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டு மரண தண்டனை எனும் தீர்ப்பைக் குறைத்து இவர்கள் மூவருக்கும் கருணை காட்டி எம்மோடு இணைந்து வாழ ஆவன செய்யும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் கையொப்பம் இட்டுமகஜர்கையளித்துள்ளனர். இ

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 120 |
| தக்காளி | 160 | 130 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 70 | 100 | 80 |
| கரட் | 160 | 130 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 250 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 160 | 110 | 140 |
| லீக்ஸ் | 20 | 80 | 140 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 150 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 90 | 160 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | — | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 130 | 130 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 40 | 40 | 34-40 |
| இராசவள்ளி | 160 | 130 | — | — |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 182

Search for people, places and things Nagendram Home

மயூரதன் மயூரன்


பள்ளிக்கூடம் போன பின்புதான்
விளையாட்டின் அருமை தெரிகிறது!
கல்லூரி போன பின்புதான்
பள்ளியின் அருமை தெரிகிறது!
வேலைக்குப் போன பின்புதான்
படிப்பின் அருமை தெரிகிறது!
ஓய்வு பெற்ற பின்புதான்
வேலையின் அருமை தெரிகிறது!
மரணப் படுக்கையில் தான்
வாழ்க்கையின் அருமை தெரிகிறது!

மகின்சன் மகி




ரத்தினசபாபதி பாலராஜா

டாக்டர் : நீங்க இவரை ஒரு மணி நேரம் முன்னாடி கொண்டு வந்திருந்தீங்கன்னா காப்பாத்தியிருக்கலாம்...



நோயாளியின் உறவினர் : அதுக்கென்ன செய்ய? இவங்களுக்கு ஆக்சிடென்ட் நடந்தே கால்மணி நேரந்தானே ஆச்சு?

பிறோன்சன் பிறோன்சன்



ரோட்ல போற
பொண்ணைப் பார்த்தா,
பொறுக்கின்னு
திட்டுறாங்க.

வீட்ல போய்
பொண்ணு பார்த்தா,
மாப்ளேன்னு
கும்பிடுறானுங்க!



சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாமசிவ




விபுலானந்தன் விபூசன்



குழந்தைகள் மனது வெள்ளைக் காகிதம்;
இது கசங்கிவிடும் முன்பே நல்லதை
எழுதிவிட வேண்டும்.

-டொன்பொஸ்கோ

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**சைவநெறி** **ஒரு மணித்தியாலம்**

## பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. 'சுகத்தைச் செய்பவன்' என்னும் பொருளைத் தரும் இறைவனின் திருநாமம்.
1.சங்கரன் 2. சதாசிவன் 3. கங்காதரன் 4. பசுபதி

2. நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர்.
1. இராமானுஜர் 2. நாதமுனிவர் 3. மத்துவர் 4. சங்கரர்

3. ஆருத்திரா தரிசனம் எனப்படுவது.
1. சிவராத்திரி 2. மார்கழி திருவாதிரை
3. பங்குனி உத்தரம் 4. ஐப்பசி வெள்ளி

4. முதலையுண்ட பிள்ளையை மீட்டு அற்புதம் புரிந்தவர்.
1. திருநாவுக்கரசர் 2. சுந்தரமூர்த்தி நாயனார்
3. மாணிக்கவாசகர் 4. திருஞானசம்பந்தர்

5. 'கொற்றவன்குடி முதலியார்' என அழைக்கப்படுவர்.
1. மெய்கண்ட தேவர் 2. உமாபதி சிவாச்சாரியார்
3. அருணந்தியார் 4. மறைஞான சம்பந்தர்

6. சுந்தரர் அடைந்த முக்தி.
1. சாமீபம் 2. சாரூபம் 3. சாலோகம் 4. சாயுச்சியம்

7. பந்தம், தளை, மலம் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுவது.
1. பசு 2. பாசம் 3. பதி 4. ஆணவம்

8. திருக்கேதீச்சரம், திருக்கோணஸ்வரம் ஆகிய தலங்கள் மீது தேவாரம் பாடியவர்.
1. மாணிக்கவாசகர் 2. திருஞானசம்பந்தர்
3. திருமூலர் 4. அகத்தியர்

9. கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்பது.
1. நித்தியக் கிரியை 2. காமியக் கிரியை
3. நிஷ்காமியக் கிரியை 4. நைமித்திய கிரியை

10. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய பூசகரின் பெயர்.
1. கப்புறாளை 2. கப்புகனார் 3. சங்கமர் 4. வண்ணக்கர்

11. மும்மலங்களையும் உடைய ஆன்மாக்கள்.
1. சகலர் 2. பிரளயாகலர் 3. வித்தகர் 4.பித்தர்

12. அருளல் தொழிலைப் புரிகின்ற மூர்த்தம்.
1. மகேஸ்வரன் 2. சதாசிவன்
3. சாம்பசிவம் 4. மகாவிஷ்ணு

13. திருப்பல்லாண்டுப் பாடப்பட்ட தினம்.
1. மாசிமகம் 2. பங்குனி உத்தரம்
3. பங்குனி திங்கள் 4. மார்கழி திருவாதிரை

14. அபிராமிப்பட்டரின் இயற்பெயர்.
1. சதாசிவன் 2. முக்தநாதன் 3. மயில்வாகனன் 4. சுப்பிரமணியன்

15. சைவசித்தாந்த நூல்வரிசையில் முதலாவதாக அமைவது.
1. சிவஞான போதம் 2. சிவஞான சித்தியார்
3. திருவருட்பயன் 4. கொடிக்கவி

16. சங்கமம் என்பதனால் குறிக்கப்படுவது.
1. மக்கள் கூட்டம் 2. பொதுக் கூட்டம்
3. சிவனடியார் கூட்டம் 4. ஆசிரியர் கூட்டம்

17. ஐந்தொழில்களை உணர்த்தும் இறைவடிவம்.
1. விநாயகர் 2. முருகன் 3. நடராஜர் 4. சோமாஸ்கந்தர்

18. மாசி மாதம் தேய்பிறை பதின்நான்காம் நாள் அனுஷ்டிக்கப்படும் விரதம்.
1. மாத சிவராத்திரி 2. விநாயகர் சதுர்த்தி
3. மகா சிவராத்திரி 4. மாசிமகம்

19. மாத்தளை முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா நடைபெறும் தினம்.
1. பங்குனி உத்தரம் 2. ஆடிப்பூரம் 3. தைப்பூசம் 4. மாசிமகம்

20. சிவன் கோயில்களின் கருவறைக்குத் தெற்குச் சுவரிலுள்ள சிவமூர்த்தம்.
1. இலிங்கோற்பவர் 2. தட்சிணாமூர்த்தி
3. சோமாஸ்கந்தர் 4. பிச்சாடனமூர்த்தி

21. சைவசமயி என்ற தகுதியைத் தருவது.
1. மானசதீட்சை 2. சமயதீட்சை 3. நயனதீட்சை 4. வாசகதீட்சை

22. மனம், வாக்கு, காயம் என்பன.
1. திரிமூர்த்தம் 2. திரிகரணம் 3. முப்பொருள் 4. மும்மலம்

23. தலயாத்திரை மூலம் நாம் அடையும் பயன்.
1. செல்வம் பெருகுதல் 2. கல்வி பெருகுதல்
3. மன அமைதி 4. திட்சித்தம்

24. சகலாகமபண்டிதர் எனப் போற்றப்படுவர்.
1. உமாபதி சிவாச்சாரியார் 2. மறைஞானசம்பந்தர்
3. மெய்கண்டதேவர் 4. அருணந்தி சிவாச்சாரியார்

25. இறைவனை நாயகன் நாயகி பாவத்தில் வழிபடும் மார்க்கம்.
1. தாசமார்க்கம் 2. சன்மார்க்கம்
3. ஞானமார்க்கம் 4.அறிவுமார்க்கம்

26. சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைத்தவர்.
1. யோகர்சுவாமிகள் 2. ஆறுமுகநாவலர்
3. இந்துபோட் சு.இராசரத்தினம் 4. அருணாச்சலகவிராயர்

27. யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் வாழ்ந்த சித்தர்.
1. செல்லப்பா சித்தர் 2. யோகர் சுவாமிகள்
3. கடையிற் சுவாமிகள் 4. முத்துலிங்க சுவாமிகள்

28. பௌத்த துறவியாக இருந்து சிவபிரானை வழிபட்ட நாயனார்.
1. இயற்பகையார் 2. மூத்தநாதர்
3. திருநீலகண்டர் 4. சாக்கியநாயனார்

29. அறிவால் நிறைந்த களஞ்சியமாக விளங்குவது.
1. கந்தபுராணம் 2. மகாபுராணம் 3. சிறுபுராணம் 4. பஞ்சபுராணம்

30. சூரன் எக்குணத்தின் குறியீடாகக் கருதப்படுகிறான்.
1. கன்மம் 2. மாயை 3. ஞானம் 4. ஆணவம்

31. கையிலையில் அநித்தையாக இருந்தவர் பூவுலகில் பெற்ற நாமம்.
1. சங்கிலியார் 2. மாலினியார் 3. உமையார் 4. மாதினியார்

32. ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன.
1. அந்தகரணம் 2. தன்மாத்திரை 3. ஐம்பொறி 4. பஞ்சபூதம்

33. திருவருட்பயனை அருளியவர்.
1. மெய்கண்டர் 2. நவநாசித்தர்
3. உமாபதி சிவாச்சாரியார் 4. அருணந்தி தேவர்

34. இலங்கையில் நாகவழிபாடு செய்த ஆதிகுடிகள்.
1. திராவிடர் 2. இயக்கர் 3. நாகர் 4. அரக்கர்

35. சுந்தரரால் பாடப்பட்ட ஈச்சரம்.
1. திருக்கோணேச்சரம் 2. திருக்கேதீச்சரம்
3. நகுலேச்சரம் 4. முன்னேச்சரம்

36. மாருதபுரவீகவல்லி வழிபட்ட தலம்.
1. செல்வச்சந்நிதி 2. மாவிட்டபுரம் 3. நல்லூர் 4. மண்டூர்

37. சோழர்கள் பொலநறுவைக்கு வழங்கிய பெயர்.
1. காஞ்சிபுரம் 2. சொர்க்கபுரம்
3. ஜனநாதமங்கலம் 4. பெருமங்களம்

38. தென்னிலங்கையில் அமைந்த வரலாற்றுச் சிறப்புமிகு தலம்.
1. பிரம்மபுரம் 2. கதிர்காமம் 3. நகுலேச்சரம் 4. நந்தீச்சரம்


39. முருகனின் திருப்படைக் கோயில்களில் பிரதிஷ்டைச் செய்யப்பட்டிருப்பது.
1. மயில் 2. வேல் 3. சேவல் 4. வாள்

40. சைவசமய வீழ்ச்சிக் காலமாக கருதப்படுவது.
1. போர்த்துக்கேயர் காலம் 2. ஒல்லாந்தர் காலம்
3. ஆங்கிலேயர் காலம் 4. பாண்டியர் காலம்


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிழல்கள்



உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுடன் களனிப் பல்கலைக்கழக நூலக மற்றும் தகவல் விஞ்ஞானப் பிரிவு இணைந்து நடத்திய இலங்கையின் உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான சிறந்த நூலகங்களினைத் தெரிவு செய்து பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ்ஜில் நடைபெற்றது. இப்போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று கடந்த 2013 ஆம் ஆண்டிற்குரிய சுவர்ணபுரவர விருதை வடமாகாணத்தின் யாழ்.பொதுசன நூலகம் பெற்றுக் கொண்டது. இதற்குரிய சுவர்ணபுரவர விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு அவ்விருதினை யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதனிடம் வழங்கி கௌரவித்ததுடன் ஒரு இலட்சம் பெறுமதியான பணப்பரிசிலையும் வழங்கினார். இத்தகையதொரு வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கிய யாழ். பொதுசன நூலக ஊழியர்களைப் பாராட்டும் வகையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நூலகத்திற்கு வருகை தந்து உத்தியோகத்தர்களை கௌரவித்த போது எடுக்கப்பட்ட படம்



வவுனியா கந்தசுவாமி கோவிலில் கடந்த 29 ஆம் திகதி சூரன் போர் இடம்பெற்றது. இதன் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.
(படம்:-குருமன்காடு செய்தியாளர்)




வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகம் சிறுவர் இல்லத்தினரால் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் கொண்டாடப்பட்டது. இதில் இல்லச் சிறுவர்கள் பங்கேற்ற நிகழ்வை படத்தில் காணலாம்.
(படம்:-குருமன்காடு செய்தியாளர்)





யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ். கல்வி வலய **செயற்பட்டு மகிழ்வோம்** சிறுவர் விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வியமைச்சின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி அலகு செயற்றிட்ட அதிகாரி மில்ரோய் ஜயமான்ன ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைப்பதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் மாணவி ஒருவருக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பெருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கவிதை, பேச்சு, ஓவியம், பாடலாக்கம் போன்ற போட்டிகள் கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவிகள் ஓவியப் போட்டியில் பங்கேற்று ஓவியம் வரைவதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)







அருள்மிகு சூரி சிவன் கோவில் சைவத்தமிழ் சங்கம்-சுவிஸ் வரப்புயர மரநடுகை திட்டத்தின் கீழ் அண்மையில் வலிகாமம் வடக்கின் மீளகுடியமர்ந்த குரும்பசிட்டி கிழக்கு மக்களுக்கு பயன்தரு தென்னை மரங்களை வழங்கியது. இதன்போது வலி.வடக்கு பிரதேச சபைத்தலைவர் சோ.சுகிர்தன் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்றினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு பேச்சுவார்த்தை தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை



## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஈழத்தமிழரின் நிரந்தர தீர்வு குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் உத்தியோக பூர்வமாக நிபந்தனைகளையோ ஏனைய விடயங்களையோ கூட்டமைப்பு முன்வைக்கவில்லை என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமாயின் அது குறித்து அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்ததை நடத்த விரும்பினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவும் வர முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆற்றும் உரைகள் போதுமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் நிபந்தனைகள் இருந்தால் அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட மூன்று வாக்குறுதிகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அமைச்சர் ஒருவருக்கு வந்த கொள்கலன்கள் மீது சந்தேகம்

## சுங்கப்பிரிவு அதிகாரிகள் விசாரணை

.இலங்கையின் அமைச்சர் ஒருவரின் பெயரின் கீழ் இயங்கும் நிறுவனத்துக்கு வந்த இரண்டு கொள்கலன்கள் சோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்டமை தொடர்பில சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கொள்கலனில் ஒன்று மோட்டார் உதிரிப்பாகங்கள் அடங்கியது என்று கூறப்பட்டது.

எனினும் இரண்டு கொள்கலன்களும் பயன்படுத்திய சைக்கிள் என்ற அடிப்படையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த கொள்கலன்கள் இரண்டும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவின் பெயரில் இயங்கும் நிறுவனத்தின் பெயருக்கே அனுப்பப்பட்டிருந்தன என்று துறைமுக சுங்கத்தரப்பு தெரிவித்துள்ளது.

இரண்டு கொள்கலன்களும் கடந்த செவ்வாய்க்கிழமையன்று துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. எனினும் குறிப்பிட்டபடி இரண்டும் பயன்படுத்திய சைக்கிள் அடங்கிய கொள்கலன்கள் இல்லை என்று சுங்கத்தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

ஏனெனில் குறிப்பிட்டபடி 200 சைக்கிள்கள் என்றால் அவற்றுக்கு இரண்டு கொள்கலன்கள் அவசியமில்லை என்பதே சுங்கத்தரப்பின் வாதமாகவுள்ளது. (இ-5)

### இவ்வளவு நிவாரணம் வழங்கிய பட்ஜெட்டை நான் காணவே இல்லை

நான் 29 வருடங்களாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கிறேன்.பல வரவு செலவு திட்டங்களை பார்த்துள்ளளேன். சகல துறைகளிலும் சலுகை வழங்கக் கூடிய இவ்வளவு நிவாரணம் வழங்கிய ஒரு பட்ஜெட்டை நான் கண்டதே இல்லை என சீனிக் கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் லக்ஸ்மன செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். இதே வேளைபதுளை மாவட்டத்தில்நிகழ்ந்த மண்சரிவு அனர்த்தம் குறித்தும் அமைச்சர் கவலை தெரிவித்தார். (இ-5)

# அளுத்கம தர்கா நகரில் மீண்டும் பதற்றம் பெண்ணொருவரின் மண்டை உடைந்தது

(கொழும்பு)

அளுத்கம, தர்கா நகரில் நேற்று முன்தினம் மாலை சிங்கள- முஸ்லிம் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, கடும் பதறறம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தர்கா நகர் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் அயலிலுள்ள பதிராஜகொட ஊரில் நடைபெற்ற காற்பந்தாட்டப் போட்டியொன்றில் கலந்து கொண்டு வெற்றியீட்டியுள்ளனர்.

அவர்கள் திரும்பி வரும் வழியில் சிங்கள நபரொருவர் பதிராஜகொட விகாரை அருகில் பாதையை மறித்து தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்தி தகராறுக்கு இழுத்துள்ளார்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் சிங்கள- முஸ்லிம் இளைஞர்களின மோதலாக உருவெடுத்துள்ளது. இதன்போது அவ்வழியால் சென்ற, இந்த மோதலுடன் சம்பந்தமே இல்லாத திருமதி தௌபீக் என்ற பெண்மணி கடுமையான தாக்குதலுக்குள்ளாகி, மண்டை பிளந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் போது விகாரையின் மணி தொடர்ச்சியாக ஒலிக்கப்பட்டு சிங்களவர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக முஸ்லிம் இளைஞர்கள தமது வாகனங்களில் ஏறி, காயங்களுடன் தப்பியோடியுள்ளனர்.

எனினும் ஒரு பல்சர் ரக இரு சக்கர வண்டி மட்டும் சிங்களவர்களின் கையில் சிக்கியுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர் தர்கா நகருக்குள் சோதனை நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் காயமடைந்த பெண்ணின் இரண்டு மகன்களான இம்ரான், இன்சாப் ஆகிய இரண்டு பேர் மற்றும் அங்கிருந்த மற்றுமொரு நபர், அயல் வீட்டிலிருந்து மூன்று பேர் என கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு சம்பவத்துடன் எதுவித சம்பந்தமும் இல்லையென்று தெரிய வருகின்றது.

மேலும் கலவரம் நடந்த இடத்தில் பல்சர் வண்டியை விட்டுவந்த இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. அத்துடன படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் நிறைவு

ஓர் ஆச்சிரமத்தில் ஒரு துறவி இருந்தார். அவரது சீடரொருவர் அவருக்கு கொடுப்பதற்காக தேநீர்க்கோப்பையைக் கையில் பிடித்துக்கொண்டு மெதுவாக நடந்து வந்தார்.

வாயிற்படியைத்தாண்டும் போது கொஞ்சம் தடுமா றிப் போனார்.

கையிலிருந்த தேநீர்க்கோப்பை தவறிப்போய் கீழே விழுந்து விட்டது.

தேநீர் தரை முழுவதும் சிதறிவிட்டது.

அந்த சீடர் திகைத்துப்போய் விட்டார்.

ஏனைய சீடர்களும் இதைக்கவனித்தார்கள்.

சரி...இன்றைக்கு இவன் குருவிடம் வகையாக மாட்டிக்கொண்டான் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்த சீடர் நேராக குருவிடம் போனார்.

எனக்கு ஒரு விடயம் புரியவில்லை என்று மெது வாக ஆரம்பித்தார். குரு நிமிர்ந்து பார்த்தார்.

எந்த விடயம் உனக்கு புரியவில்லை என்கிறாய்? என்றார்.

இந்த உலகத்தில் மரணத்தை யாரும் விரும்புவதில்லை. நான் விரும்பாத ஒன்றை அவர்கள் கட்டாயமாக ஏற்கும் படி ஆகிறதே? என்றார் சீடர்.

இப்பொழுது குரு சொன்னார், மரணம் என்பது திணிக்கப்பட்டதாக இருந்தால் தானே அது கட்டாயம் ஆகும். உண்மையில் அது அப்படியில்லை. இறப்பு என்பது பிறப்பைப்போலவே இயல்பான ஒரு விடயம். பிறந்தவர்கள் இறந்து போவது இயற்கையின் நியதி. அது தவிர்க்க முடியாதது. அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை என்றார். உடனே இந்த சீடன் சொன்னார்.

அப்படியானால்...உங்கள் தேநீர்க்கோப்பை இப் போது தவிர்க்க முடியாது செத்துப்போய் விட்டது. அதற்காக வருத்தப்படாதீர்கள் என்றார்.

இப்படிக்கூறிய இதே சீடன் தான் பிற்காலத்தில் இக்கியு என்கிற ஜென்குரு.தன்னுடைய நிலையாமையை உணர்ந்த யாரும் தன்னை விட்டுப்போன எதற்காகவும் (பொன்,பொருள்,உறவு) வருத்தப்படமாட்டார்கள். பெரியவர்களை சந்திக்கும் போது, எனக்காக எதை யாவது சொல்லுங்கள் என்று கேட்பது வழக்கம்.

ஜப்பானில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் ஒரு நாள் சென்காய் என்ற ஜென் துறவியை சந்தித்தார். எனக்காக ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்கள் என்றார்.

துறவி உடனே ஒரு வாசகத்தை எழுதிக்கொடுத்தார்.

தந்தை இறப்பு -அதன்பின்

தனயன் இறப்பு-அதன்பின்

பேரன் இறப்பு என்று எழுதிக்கொடுத்தார்.

செல்வந்தர் வாங்கிப்பார்த்தார். அவருடைய முகம் ஒரு மாதிரியாகிவிட்டது.

என்ன இது ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்கள் என்று கேட்டால் இப்படியா சொல்வது? இதுவா நல்ல வார்த்தை?

அவரது குழப்பத்தை குரு புரிந்து கொண்டார். அவரை அருகில் கூப்பிட்டு இப்பொழுது நான் எழுதிக் கொடுத்தேனே... அது தான் இயல்பு அப்படி அமைந் தால் தான் நல்லது. முதலில் தந்தை-அதன்பின் மகன் -அதன்பின் பேரன் என்ற வரிசையில்தான் இறப்பு அமைய வேண்டும். இது இடம் மாறி முன்னே பின்னே நடந்தால் எப்படியிருக்கும்?வரிசையாக வந்து,வரிசையாக போக வேண்டும். அது தான் நல்ல வாழ்க்கை என்று விளக்கம் கொடுத்தார்.

ஒரு வைத்தியர் படுக்கையிலிருந்த ஒரு நோயாளியின் கையைப்பிடித்து பார்த்தார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த தாதி கேட்டார்,

வைத்தியர் நோயாளியுடைய பல்சையும் உங்களுடைய கடிகாரத்தையும் மாறி மாறி பார்த்து குழம்பிப் போய் இருக்கிறீர்களே... என்ன விடயம்? என்றார்.

இரண்டில் ஏதோவொன்று நின்று விட்டது என்றார் வைத்தியர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வேட்டை மன்னன்!













(தொடரும்)

## 11.2014 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1493 - கரிபியன் கடலில் டொமினிக்காத் தீவை முதன் முதலில் கொலம்பஸ் கண்டார்.
- 1655 - பிரான்சும் இங்கிலாந்தும் இராணுவப் பொருளாதார ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1812 - நெப்போலியனின் இராணுவத்தினர் வியாஸ்மா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்றனர்.
- 1838 - பாம்பே டைம்ஸ் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இது பின்னர் 1861 இல் டைம்ஸ் ஆஃப் இந்தியா எனப் பெயரிடப்பட்டது.
- 1903 - ஐக்கிய அமெரிக்காவின் தூண்டுதலை அடுத்து பனாமா கொலம்பியாவிடமிருந்து தனது விடுதலையை அறிவித்தது.
- 1905 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க உத்தரவிட்டான்.
- 1913 - ஐக்கிய அமெரிக்கா வருமான வரியை அறிமுகப்படுத்தியது.
- 1918 - போலந்து ரஷ்யாவிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1957 - உலகில் முதன் முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா என்னும் நாயை) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 விண்கப்பலில் விண்வெளிக்கு அனுப்பியது.
- 1963 - தி.மு.க. செயற்குழு திராவிட நாடு, தனிநாடு கோஷத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.
- 1964 - வாஷிங்டன் டீசி மக்கள் முதன் முறையாக அமெரிக்க அதிபர் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்கள்.
- 1970 - சல்வடோர் அலெண்டே சிலியின் அதிபரானார்.
- 1973 - நாசா மரைனர் 10 என்ற விண்கப்பலை புதன் நோக்கி அனுப்பியது. 1974, மார்ச் 29 இல் அக்கோளை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1988 - இலங்கையின் தமிழ்க் குழுவான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் மாலை தீவுகள் அரசை அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி இந்திய இராணுவத்தினரால் 24 மணி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

### பிறப்புகள

- 1618 - ஔரங்கசீப், இந்தியாவின் மொகாலய சக்கரவர்த்தி. (இ. 1707).
- 1795 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1849)
- 1911 - ஏ. கே. செட்டியார், தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி (இ. 1983)
- 1933 - அமர்த்தியா சென், இந்தியப் பொருளாதார நிபுணர், நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள

- 1639 - மார்டின் தெ போரஸ், பெரு நாட்டுப் புனிதர் (பி. 1579)
- 1954 - ஆன்றி மட்டீசு, பிரெஞ்சு ஓவியர் (பி. 1869)
- 1957 - லைக்கா, சோவியத் நாய் (பி. 1954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவம் இல்லாத பலர் இங்கிலாந்து அணியில் இடம்பெற்று இருந்தனர். மிகவும் வலு குறைந்த அணியாகவே அது கருதப்பட்டது.

இங்கிலாந்துடனான போட்டியில் சச்சின் தனது 27 ஆவது செஞ்சுரியை அடித்தார். இது அவருக்கு எண்பத்தி எட்டாவது டெஸ்ட். 27 ஆவது செஞ்சுரி அடித்ததன் மூலம் ஸ்டீவ்வா மற்றும் ஆலன்பார்டர் ஆகியோர் ஏற்கனவே அடித்த 27 சதங்களைச் சமன் செய்தார். இப்போது டெஸ்ட் போட்டிகளில் சச்சினுக்கு முன்னால் இருப்பவர்கள் இருவர் மட்டுமே. பிராட்மென் 29 செஞ்சுரிகள் மற்றும் கவாஸ்கர் 34 செஞ்சுரிகள். இந்தியா 1-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்றது. ஒருநாள் போட்டிகள் 3-3 என்று சமன்படுத்தப்பட்டன. சச்சின் எடுத்த மொத்த ரன்கள் 307.

சச்சின் இந்திய அணியை ஏமாற்ற, இந்திய அணி ரசிகர்களை ஏமாற்றியது. டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் போட்டிகளிலும் சச்சின் சரியாக விளையாடாமல் மீண்டும் ரசிகர்கள் நம்பிக்கையைப் பொய்த்தார்.

சராசரி 75%. தொடர் நாயகனாக சச்சின் தேர்வு செய்யப்பட்டதில் வியப்பொன்றும் இல்லை.

இங்கிலாந்து அணியைத் தொடர்ந்து ஜிம்பாப்வே அணி இந்தியாவில் தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டது. நாக்பூர் மற்றும் புதுடெல்லியில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடத்தப்பட்டன. ஜிம்பாப்வேவை வலிமை வாய்ந்த அணியாகக் கருத முடியாவிட்



டாலும் அவ்வப்போது குடைச்சல் தரும் அணியாகக் கருத வேண்டி உள்ளது. இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இந்தியா ஜெயித்ததன் மூலம் தொடரை வென்றது. நாக்பூரில் நடைபெற்ற போட்டியில் சச்சின் 176 ரன்கள் அடித்ததன் மூலம் தனது 28 ஆவது செஞ்சுரியை பதிவு செய்தார். டெல்லியில் இந்தியா ஜெயித்தபோது சச்சின் 36 ரன்களை மட்டுமே சேர்க்க முடிந்தது.

ஜிம்பாப்வே டெஸ்ட் போட்டிகள் முடிந்தவுடன் இந்தியா மேற்கு இந்திய தீவுகளுக்குப் பயணித்தது.

### கவாஸ்கரின் ரிக்கார்ட் செஞ்சுரிகளுக்கு சமமாக!

ஐந்து டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட்டிகள் ஏற்பாடாயின. ஜார்ஜ்டவுனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் டிராவில் முடிந்தது. சச்சின் எடுத்தது 79 ரன்கள். போர்ட் ஆஃப் ஸ்பெயினில் நடந்த இரண்டாவது டெஸ்ட்டில் இந்தியா வெற்றிபெற்றது. சச்சின் அடித்த 29 ஆவது செஞ்சுரி அந்த வெற்றிக்கு வழி வகுத்தது. இந்த சதத்தின் மூலம் சச்சின் பிராட்மென் அடித்த செஞ்சுரிகளை சமன் செய்தார். பிரிஜ்டவுனிலும் செயிண்ட் ஜான்ஸ் மற்றும் கிங்கஸ்டனில் நடைபெற்ற போட்டிகளில் இந்தியா இரண்டில் டிரா செய்தும் ஒன்றில் தோற்றும் போனது. சச்சின் சொல்லும்படி ரன்கள் எதுவும் குவிக்கவில்லை. ஆக, இரண்டு டெஸ்ட்களில் ஜெயித்ததன் மூலம் மேற்கு இந்தியத் தீவுகள் 2-1 என்ற கணக்கில் இந்தியாவைத் தோற்கடித்தது. மூன்றாவது மற்றும் ஐந்தாவது ஒருநாள் போட்டிகளில் சச்சின் 34 மற்றும் 65. இரண்டிலும் இந்தியா வெற்றி பெற்றது.

மேற்கு இந்தியத் தீவுகள் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து 2002 புத்தாண்டில் இங்கிலாந்து சுற்றுப்பயணம் ஆரம்பமானது. லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்தியா தோற்றுப் போனது. சச்சின் எடுத்த ரன்கள் 16 மற்றும் 12. நாட்டிங் ஹாமில் நடந்த இரண்டாவது போட்டி டிரா ஆனது. சச்சின் 34 மற்றும் 92 ரன்கள் குவித்து ஆட்டத்தை டிரா செய்ய உதவினர். லீட்ஸில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் சச்சின் அபாரமாக விளையாடி 193 ரன்கள் எடுத்தார். இந்தியா வெற்றி பெற்றது. சச்சினுக்கு இது 30 ஆவது டெஸ்ட் சதம். ஓவலில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் ஆட்டம் டிராவில் முடிந்தது. இரண்டு டிரா, ஒன்றில் வெற்றி, ஒன்றில் தோல்வி, ஆக தொடர் சமன் செய்யப்பட்டது.

டெஸ்ட் போட்டிகளை அடுத்த இந்தியா, இங்கிலாந்து மற்றும் இலங்கை நாடுகள் பங்குபெற்ற முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் துவங்கின. இங்கிலாந்திற்கு எதிராக நடைபெற்ற போட்டிகளில் சச்சின் 105 மற்றும் 113 ரன்கள் எடுத்தார். இதன்மூலம் இந்த முத்தரப்பு போட்டிகளில் சச்சின் தனது 32 ஆவது மற்றும் 33 ஆவது ஒருநாள் செஞ்சுரிகளை அடித்து சதங்கள் பட்டியலை அதிகரித்துக் கொண்டார்.

கே. ரமேஷ்

(தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

ஆன்மீகம் 63

இன்னொரு விடயம்; நிபந்தனையற்ற அன்பு உங்களுக்கும் எதையும் திரும்பத் தராது என்று நினைக்காதீர்கள். அது உங்களுக்குப் பல வழிகளில் விடயங்களைத் திரும்பக் கொண்டு வந்துதரும். ஆகவே, நீங்கள் உங்களிடம் வரும் விடயங்களைப் பார்த்து அவற்றால் பாதிக்கப்படாமல் இருக்கவும் அன்பிற்காகவே தொடர்ந்து அன்பாக இருக்கும் அளவிற்கு வளர்ச்சி அடையவும் வேண்டும். உங்களுக்குப் பதிலுக்குக் கிடைக்கும் விடயங்களை உங்கள் அறிவு உங்களைப் பார்க்க வைக்கும். அதே அறிவு உங்களை ஆனந்தமயமாக அவற்றால் தொடப்படாமலும் காக்கும்.

உங்கள் இதயத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்படும். மேலும் நீங்கள் புது மனிதனாகிவிடுவீர்கள். உங்களுக்குள் நிகழ்ந்த மாற்றத்தை நீங்களும் மற்றவர்களும் உணர்வீர்கள். மக்கள் உங்களிடம் ஒரு புது விதமான மரியாதையை வளர்த்துக்கொள்வார்கள். அவர்கள், ஒரு வழியில் அவர்களால் புரிந்து கொள்ள முடியாத வகையில் நீங்கள் மலர்ந்து கொண்டிருப்பதைக் காண்பார்கள். நீங்கள் பரப்பும் சக்தியை அவர்களால் உணர முடியும்.

நிபந்தனையற்ற அன்பைப் பொழிவதற்கு, நீங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். நீங்கள் சுதந்திரமாகவும் விடுதலை பெற்றதாகவும் உணர்ந்தால்



தான் உங்களால் ஒரு கவலையும் காரணமும் இன்றி அன்பாக இருக்க முடியும். விடுதலை என்றால் நான் என்ன பொருள் கொள்கிறேன்? ஜாதி, மதம், இனம், மதக் கோட்பாடுகள், சமயப் பிரிவுகள், குடும்பம், உறவினர்கள் முதலியவற்றால் கட்டுப்படாமல் இருத்தல்; ஏனெனில், இவற்றால் நீங்கள் கட்டுப்பட்டு இருந்துவிட்டால், உங்கள் அன்பும் கட்டுப்பட்டதாகிறது; கட்டுப்பட்ட அன்பு உண்மையான அன்பு அல்ல. எவ்வாறு உங்களால் எல்லைகளுடன் அன்பு செலுத்த முடியும்? அது அன்பின் வரையறைக்கே எதிராக உள்ளது! நான் உங்கள் குடும்பம், மதம் முதலியவற்றை மறந்து விடும்படிச் சொல்லவில்லை; அன்பை இவற்றின் பின்னணியில் பார்க்காதீர்கள் என்று சொல்கிறேன். அவ்வளவே. நீங்கள் அன்பாக இருந்தால் விடுதலை பெற்றது போல அன்பைப் பொழியுங்கள். எப்பொழுது நீங்கள் விடுதலை பெற்றதாக உணர்கிறீர்கள்? இதுபோன்ற எல்லா அடிமைத்தளையிலிருந்தும் சுதந்திரம் பெறும்பொழுது நீங்கள் உங்களை ஒரு குறிப்பிட்ட விடயத்துடன் அடையாளம் காணாத போது நீங்கள் இந்த முழு பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதிதான் என்பதை உணரும் பொழுது மட்டுமே உங்களால் எல்லையற்ற அன்பைப் பொழிய முடியும். நிபந்தனையற்ற அன்பைப் பொழிவதற்கு, நீங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். நீங்கள் சுதந்திரமாகவும் விடுதலை பெற்றதாகவும் உணர்ந்தால்தான் உங்களால் ஒரு கவலையும் காரணமும் இன்றி அன்பாக இருக்க முடியும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

....கௌரவ சபாநாயகர் அவர்களே, வியாபாரம் மற்றும் அறிவுச் செயன்முறைச் சேவைகள், உயர்தொழில் சேவைகள், துறைமுகங்கள் மற்றும் விமானச் சேவைகள், வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் போன்ற சேவைகள் ஏற்றுமதியிலும் இந்த நாடு ஆற்றலினை கொண்டுள்ளது.

2020 இல் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை இரண்டும் ஒவ்வொன்றும் 5 பில்லியன் ஐக்.அமெ.டொலர்களை வெளிநாட்டு வருமானமாக ஈட்டித் தருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திறன் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, வெளிநாட்டு ஊழிய சம்பாத்தியம் என்பவற்றில் 2020 இல் 15 பில்லியனுக்கு அதிகமான ஐக்.அமெ.டொலர்களை ஈட்டித் தருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளமை ஊக்கமளிக்கக் கூடிய ஒரு விடயமாகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதத்திற்கு குறைவாக குறைப்பதன் மூலம் உயர்ந்த முதலீட்டு தரத்தினை அடைந்து கொள்வதற்கு முயற்சித்துள்ளதுடன் 2020 இல் நாட்டின் பொருளாதார ஸ்திரத தன்மையினை ஒருங்கிணைப்பதற்கு நாட்டின் ஏற்கனவே ஸ்திரமான பேரண்டப் பொருளாதார சூழலினை மேலும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இந்த பணிப்புரைக்கமைவாக மொ.உ.உற்பத்தியில் முதலீடானது 40 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

13 சதவீத வளர்ச்சியினைக் கொண்ட மொ.உ.உற்பத் தி 1,109 பில்லியன் டொலர்களுக்கு அதிகமாகக் காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. குறைவிருத்தி பொருளாதாரத்திலிருந்து பொருளாதாரத்தினை மாற்றுகின்ற செயன்முறையில் 2005 இற்கு முன்னர் 1,200 ஐக்.அமெ.டொலர்களுக்கு குறைவாக காணப்பட்ட தலைக்குரிய வருமானம் 2015 அளவில் 4.000 ஐக்.அமெ.டொலராக காணப்பட்டதுடன் 2020 அளவில் எமது மக்களின் தலைக்குரிய வருமானத்தினை 7,500 ஐ.அ.டொலர்களாக அதிகரித்து எமது தேசிய வருமான இலக்காக உயர் நடுத்தர வருமான நாடாக உயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

2005 மற்றும் 2014 ஆண்டுகளுக்கிடையில் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை அதிகரிக்கும் வகையில் உலக சமாதான சுட்டி, பொருளாதார சுதந்திர சுட்டி, சட்டவாச்சி சுட்டி, வியாபார நடத்துகை சுட்டி, மனிதவள அபிவிருத்தி சுட்டி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி சுட்டி என்பவற்றுடன் 2020 இல் வறுமையிலிருந்து விடுபட்ட நிலையினை அடைந்த ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதல் 10 நாடுகளில் ஒன்றாக இலங்கையினை மாற்றுவதற்கு நாம் திட்டமிடடுள்ளோம்.

**05.2015.17 அரசிறை வேலைச் சட்டகம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசிறைக் கொள்கை வேலைச சட்டகமானது அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை நோக்கியதற்கு முற்றிலும் மாற்றமானது என்பதனை எதிர்கட்சியிலுள்ள எமது அரசிறை விற்பனர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

எமக்கு முன்னர் 1977 இற்கு பின்னரான அனைத்து அரசாங்கங்களும் மொ.உ.உற்பத்தியில் 8 சதவீதத்திற்கு கூடிய உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையுடன் செயற்பட்டதுடன் தேசிய வருமானத்தினை விஞ்சிய திரட்டிய படுகடன் இருப்பொன்றினை எமக்கு விட்டுச் சென்றன.

எமக்கு முன்னரான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய உரிமைகளை நீக்கியதுடன் அரசாங்க சேவையினை 300,000 ஆக குறைப்பதற்கு ஆட்சேர்ப்பினை நிறுத்தியது. நிவாரணங்களை நீக்கியது.

தனியார்மயப்படுத்தல் துரிதப்படுத்தப்பட்டது. அரசாங்க முதலீடுகள் குறைக்கப்பட்டன. இதுதான் அன்றைய அரசாங்கத்தின் அரசிறைக் கொள்கையின் பிரதான இலட்சணமாகக் காணப்பட்டது.

2005 இலிருந்து எமது அரசாங்கம் எந்தவொரு அரச தொழில் முயற்சியினையும் தனியார் மயப்படுத்தவில்லை. இதற்கு மாறாக, வாயுக் கம்பனி, ஶ்ரீலங்கன் எயார் லைன்ஸ், ஶ்ரீலங்கா ரெலிகொம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பெலவத்தை மற்றும் செவனகல சீனிக் கம்பனிகள், கொழும்பு ஹில்டன் என்பவற்றினை நாம் மீளப் பெற்றுக் கொண்டோம்.

இ.மி.சபை, துறைமுக அதிகார சபை, நீர் வழங்கல் சபை, விமான நிலைய அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், பல்கலைக் கழகங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், காணி மற்றும் ஆதனம் என்பவற்றில் ஆதன பெறுமதி உருவாக்கம் என்பன அரசாங்க கடனைவிட அதிகமாக காணப்பட்டது.

அவை இந்நிறுவனங்களை கட்டியெழுப்பியதன் மூலம் நாம் பெற்றுக் கொண்டவையாகும்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள், திவிநெகும, சமூர்த்தி நன்மைகள், உரமானியம் என்பவற்றின் மீதான செலவினத்தினை நாம் அதிகரித்ததுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான உத்தரவாத விலைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

ஏறக்குறைய 500,000 அரசாங்க ஊழியர்கள் மற்றும் 100,000 வேலையற்ற பட்டதாரிகள் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அரசாங்க சேவைகளை 300,000 ஆக குறைப்பதற்கு மாறாக இத்துறையினை ஏறக்குறைய 1.3 மில்லியனாக அதிகரித்துள்ளோம்.

பயங்கர வாதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கும் பிழையாக வழிநடத்தப்பட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தினை ஊக்குவிப்பதற்கு இரு மொழிப் பிரயோகத்தினை பிரசித்தப்படுத்தல் என்பவற்றிற்காக அரசாங்கம் நிதியினை செலவிட்டுள்ளது.

எமது முப்படையினரது பெற்றோர், அங்கவீனமுற்ற படையினருக்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்குவதற்கும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கும் எம்மால் முடியுமாக இருந்தது.

இவை அனைத்துடனும் 2014 இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையானது மொ.உ.உற்பத்தியில் 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதுடன் 2015 இல் 4.6 சதவீதமாக குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வருமானத்தில் மிகையினை மொ.உ.உற்பத்தியில் 2.5 சதவீதமாக படிப்படியாக அதிகரிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளதுடன் 2016 அளவில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 3.5 சதவீதமாகவும் 2017 இல் 3 சதவீதமாகவும் குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

கடன் பெறுகைகளின் வரையறைக்கான எமது அர்ப்பணிப்பு மூலதன உருவாக்கத்திற்காக மாத்திரம் காணப்பட்டதுடன் நுகர்வுக்கானதாக இருக்கவில்லை.

படுகடன்-மொ.உ.உற்பத்தி விகிதத்தினை 65 சதவீதமாக நாம் குறைக்கவுள்ளோம்.

எமது பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்துவதற்காக 2009 இல் உடன்படிக்கை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட 2.5 பில்லியன் ஐக.அமெ.டொலர் சர்வதேச நாணய நிதியக் கடனில் அரைவாசியினை நாம் திரும்ப செலுத்தியுள்ளோம்.

எமது நாட்டின் கடன் பழுவினை குறைப்பதற்காக அனைத்து விதமான கடன் சேவைகளையும் ஈடு செய்வதற்கு முடியுமான வகையில் நாம் உறுதியான வரவு செலவுத் திட்டமொன்றினை உருவாக்குவோம்.

2015 இல் அரசாங்க வருமானம் ஏறக்குறைய ரூபா 1,600 பில்லியனாகக் காணப்படுவதுடன் நடைமுறைச் செலவினம் ரூபா 1,400 பில்லியன்ாகக் காணப்படும். இது சம்பளங்கள், ஓய்வூதியம், உரமானியம், மருந்துப் பொருட்கள், நலன்புரிச் செலவினங்கள் மற்றும் படுகடன் வட்டிச் செலவினம் என்பவற்றிற்கான கொடுப்பனவுக்கானதாகும்.

மேலும், உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக ரூபா 730 பில்லியனாக வரவு செலவுத்திட்டம் பேணப்படும்.

பொருளாதார முன்னுரிமைகளின் அடிப்படையில் ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முறையான ஒருங்கிணைப்பு அரசாங்க செலவினத்திலிருந்து ஆகக் கூடிய பயனைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தியாவசியமானதாகும்.

எனவே, நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவின நிகழ்ச்சித் திட்டங்களும் 2015 -17 நடுத்தரக் காலாண்டில் அபிவிருத்தி முன்னுரிமைகளின் அடிப்படையில் 2015 வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு காணப்படும்.

திரட்டிய நிதியம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அனைத்து வெளிநாட்டு மானிய உதவியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைய திட்டமிடல் மற்றும் அரசாங்க நிதி முகாமைத்துவ செயன்முறைகள் பின்பற்றப்படும்.


சுமூகமான காசு பகிர்ந்தளிப்பு மற்றும் அரசாங்க செலவின நிகழ்ச்சித் திட்டங்களின் தடங்கலற்ற செயறபடுத்துகை என்பவற்றிற்காக அனைத்து செலவின முகவராண்மைகளையும் கண்காணித்து கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கு நாம் திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

**அரச தொழில்முயற்சிகள்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரச ஆதனங்களும் தொழில் முயற்சிகளும் எமது நாட்டிலுள்ள மிக முக்கிய வளங்களென எமது அரசாங்கம் உறுதியாக நம்புகின்றது.

பிரதான அரச தொழில்முயற்சிகள் அவற்றினது சம்பாதிக்கும் ஆற்றலினை அதிகரிக்கும் வகையிலும் அவற்றினது சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான மக்களின் செலவினததினை குறைப்பதற்கும் அரசாங்கம் அதன் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அவற்றின் ஆதன அடிப்படைகளை கட்டியெழுப்பியுள்ளது.

கடந்த வருட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி யினால் அவற்றிற்கு வழங்கப்பட்ட அனைத்து கடன்களையும் அவற்றினது ஐந்தொகையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் பங்குகளாக மாற்றுவதற்கு நாம் ஆரம்பித்துள்ளோம்.



விமானச் சேவைகள் கம்பனி இரண்டிற்கு மூலதனமிட்டு அவற்றினை புனரமைப்பதன் மூலம் ஶ்ரீலங்கன் விமான சேவை மற்றும் மிஹின் லங்கா விமான சேவையானது 25 விமானங்களையும் நாம் தற்பொழுது பயன்படுத்தி இலங்கைக்கு நேரடியாக தொடர்புபடுத்தப்பட்டுள்ள 44 நாடுகளில் 90 இடங்களுக்கான சேவைகளை வழங்கக் கூடியதாகவுள்ளது.

இரண்டு விமான சேவைகளுக்குமான இறுதிக்கட்ட மூலதனமாக்கலுக்காக இந்த வரவு செலவுத திட்டத்தில் 2015 இல் 150 பில்லியன் ஐக்.அமெ.டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபை மற்றும் விமான நிலைய அதிகார சபை என்பன தற்பொழுது பிராந்தியத்தில் கவர்ச்சிமிக்கதும் இலாபமீட்டக் கூடியதுமான இரண்டு சர்வதேச துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் முகாமை செயகின்றன. 54 அரச உடமை வியாபார தொழில்முயற்சிகளில் 47 தொழில்முயற்சிகள் இலாபமீட்டக் கூடிய நிலைக்கு திரும்பியுள்ளதனை நான் இந்த பாராளுமன்றத்திற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ,த்


தொழில்முயற்சிகளின் நிர்வாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் என்பவற்றினை மேம்படுத்துவதற்காக அரச தொழில்முயற்சிகள் மீதான பாராளுமன்ற கண்காணிப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பினை நான் பெரிதும் மதிக்கின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, 2015 - 2017 நடுத்தர கால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்திற்குள் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் அரசாங்க நிதி, அபிவிருத்தி, மக்களின் நலன்புரி போன்றவற்றினை உறுதிப்படுத்துவதற்கு அரசிறை கொள்கையினை அரசாங்கம் எவ்வாறு மறுசீரமைப்புச் செய்யும் என்பதனையும் இங்கு குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாதம் கடந்து விட்டது ஒரு இஞ்சியும் நகராத ஓ.பி



மக்களின் முதல்வர்' ஆட்சியில முதல்வராக இருக்கும் ஓ.பனனீர் செல்வம் பதவிக்கு வந்து ஒரு மாதம் உருண்டோடிவிட்டது. தலைமைச் செயலகமோ... சட்ட மன்றமோ... வரலாற்றுக் கட்டடங்களோ ஒரு மாநிலத்தின் அடையாளம் அல்ல. ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் முதல்வர்தான் மாநிலத்தின் முகம். ஆனால், அந்த முகம் தமிழகத்தில் கூட தெரியவில்லை. அமைச்சராக இருந்தபோது புன்னகைக்க முடிந்த ஓ.பன்னீர்செல்வம், சிரிப்பைக்கூட தொலைத்துவிட்டு நிற்கிறார். அம்மாவின் ஆட்சி நடத்தும் பன்னீரின் ஒருமாத ஆட்சியின் காட்சிகளைப் பார்ப்போம்.

நான்கு ஆண்டுகள் சிறை, ரூ. 100 கோடி அபராதம், சொத்துகள் பறிமுதல், முதல்வர் பதவி பறிப்பு, எம்.எல்.ஏ. தகுதி இழப்பு என அத்தனை அதிரடிகளும் சேர்ந்து, துணிச்சல் அரசியல் வாதி யான ஜெயலலிதாவை முடக்கிப் போட்டுவிட்டன. மக்கள் பிரதிநிதி பட்டம்தான் அரசியலின் அளவு கோல். அதையே இழந்து தலைவி நிற்க... அவர் அமர்ந்த முதல்வர் ஆசனத்தில் அமர்ந்து, முள்பாதையில் நடந்தபடியே ஒரு மாதத்தை ஓட்டி விட்டார் பன்னீர்.

**சைரன் இல்லாமல் நிசப்தம்!**

துப்பாக்கி ஏந்திய பொலிஸ், காக்கி படை, கார்கள் அணிவகுப்பு, சைரன சத்தம் என முதல்வருக்கான அடை யாளங்கள் எதுவும் இல்லாமல் கோட்டைக்குள் நுழைகிறார் முதல்வர். சைரன்கூட சைலண்ட் மோடுக்கு போய்விட்டது.

கோட்டைக்கு பன்னீர செல்வம் வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. ஒவ்வொரு அடியையும பார்த்துப் பார்த்துதான் எடுத்து வைக்கிறார். எந்த இடத்திலும், எந்த தளத்திலும் தான் ஒரு முதல்வர் என்ற பார்வை விழுந்து விடாமல் பார்த்துக்கொள்கிறார். முதலமைச்சர் இருக்க வேண்டிய அறை பக்கம்கூட எட்டிப் பார்க்கவில்லை. தான் நிதி அமைச்சராக இருந்த அறையிலேதான் தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அமைச்சராக இருந்த போதுகூட நாற்காலியில் சாய்ந்து உட்கார முடிந்த பன்னீரால் இப்போது சாய்ந்து உட்கார முடியவில்லை. ஜெயலலிதாவின் கார் நிற்கும் கோட்டை போர்ட்டிகோவின் பக்கம்கூட பன்னீரின் கார போவதில்லை. ஓர் ஓரமாகத்தான் அவர் கார் நிற்கிறது.

**குனிந்த தலை நிமிராமல்...!**

இப்போதுபோல் ஜெயலலிதாவின் முதல்வர் பதவி 2001இலும் பறிபோனது. அப்போது முதல்முறையாகப் பதவியேற்ற பன்னீர் முதல்வர் சேம்பரை பயன்படுத்தினார். பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

ஆனால் இப்போதோ அம்மாவின் அமைதி ... வளர்ச்சி ... வளம கொள்கையில் அமைதியை மட்டும் கடைப்பிடிக்கிறார். கோட்டையைச் சுற்றிலும் இப்போதும் ஜெயலலிதாவின் படங்கள்தான். மறந்தும்கூட பன்னீர்செல்வத்தின் படத்தைப் பார்க்க முடியவில்லை. பன்னீரின் அறைப் பக்கம் போனால பரபரப்பும் இல்லை. கெடுபிடிகளும் இல்லை. பொலிஸ் கண்களும் இல்லை.

புதுப் பெண்ணைப்போல குனிந்த தலை நிமிராமல் வருகிறார், போகிறார் பன்னீர். ஆய்வுக் கூட்டங்கள் நடத்துகிறார். பிரதமருககுக் கடிதம் எழுதுகிறார். வாழ்த்துச் செய்திகள் வெளியிடுகிறார்... அவ்வளவு தான். தனது பெயரில் வரும் அறிக்கைகளில், அம்மா வழியில் ஆட்சி செய்யும் தமிழநாடு அரசு' என மறக்காமல் குறிப்பிடச் சொல்கிறார் பன்னீர்.

**அம்மா வந்தபிறகு தான் திட்டங்கள்!**

110 விதிகளில் சந்தோஷ அறிவிப்புகளை முன்பு வெளியிட்டு வந்தார் ஜெயலலிதா. அப்படி வெளியிடப்பட்ட பல அறிவிப்புகள் அம்மா மீண்டும் வந்தால்தான் உயிர் பெறும்போல. சலுகை விலையில் அம்மா சிமெண்ட அரசு வைத்தியசாலைககளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆயிரம் ரூபாய மதிப்புள்ள அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம் போன்ற அறிவிப்புகளை முதல்வரின் கவனத்துக்கு அதிகாரிகள் கொண்டு வந்தார்கள். ஆனால் அம்மா மீண்டும் முதல் வராக வருவார். அவர் கையால் தான் திட்டம் தொடங்கப் படும் என சொல்லி அமைதியாக இருந்துவிட்டாராம் பன்னீர். பால் விலை உயர்வு, மின்கட்டண உயர்வு போன்ற அறிவிப்புகள் மட்டும் வருகினறன. அதாவது அம்மாவின மீது எதிர்ப்புகள் வமர்சனங்கள் விழக்கூடிய விடயஙகளைத் தன் தலையில் போட்டுக் கொள்கிறார். இப்படித்தான் 2001இல் பன்னீர் முதல்வராக இருந்த போது பால் விலை, பேருந்து, மின்கட்டணங்களை எல்லாம் உயர்த்தினார். இதை அப்போது பத்திரிகை சந்திப்பு நடத்தி பன்னீர் அறிவித்தபோது மினி பட்ஜெட் என விமர்சனங்கள் எழுந்தன. கிரானைட், தாது மணல் கொள்ளை தொடர்பான சகாயம் விசாரணைக் குழுவை ஏற்காததால் நீதிமன்றத்தில் தமிழக அரசுக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு சரி இல்லை என உயர் நீதிமன்றம் வேறு குட்டு வைத்தது.

இப்படி ஆட்சிக்கு எதிரான விவகாரங்களில் எல்லாம் பன்னீரின் தலை உருட்டப் படுகிறது. ஆனால், எதைப்பற்றியும் பனனீர் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. பாவம், எல்லாம் பன்னீரையே சேருகிறது என அவரது ஆதரவாள ர்கள் வருத்தப்படுகிறார்கள்.

**பன்னீரை மதிக்காத அரசுத் துறைகள்!**

ஏற்றுக்கொண்டாலும் புறக்கணித்தாலும் கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் சேர்த்துதான் ஓ.பன்னீர் செல்வம் முதல்வர். ஆனால், அரசின் துறைகள்கூட பன்னீரை முதல்வராக ஏற்காமல் பந்தாடுகின்றன. இதல், செய்தித் துறைக்குதான் முதலிடம். அவர்களின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் ஜெயலலிதா தான் இப்போதும் முதல்வர். முதலமைச்சர் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில்கூட ஆரம்பத்தில் ஓ.பன்னீர்செல்வத்தின் பெயரைப் போடாமல் முதல்வர் என்றே குறிப்பிட்டார்கள். ஆனால், இவை எதைப் றியும் கவலைப்படவில்லை ஓ.பன்னீர்செல்வம். முதல்வரின் புகைப் படங்கள் அரசு அலுவலகங்களில் வைக்கப்படுவது வழக்கம். ஆனால், பன்னீருக்கு பதில் இப்போதும் போடடோவில் ஜெயலலிதாதான் சிரித்துக கொண்டிருக்கிறார். தஞ்சை பொருட்காட்சியில் பன்னீரின் படத்தை தைரியசாலிகள் யாரோ வைத்து வட... இந்த விளம்பரம்கூட, வேணடாம் எனச் சொல்லி எடுக்கச் சொல்லி விட்டாராம்.

**தீபாவளி வாழ்த்துக் கூட இல்லை!**

ஓ.பன்னீர்செல்வம் முதல்வரான பிறகு சமூக இணையத்தளங்களில் அவரைப் பற்றிய கிண்டல் மொழிகள் நின்றபாடில்லை. மக்களின் முதல்வர் ஜெயலலிதா என்றால்... பன்னீர், ஆடு மாடுகளுக்கா முதல்வர்? செவ்வாய்க் கிரகத்துக்கா முதலவர் என கமெண்ட்கள் விழுந்தபடியே இருக்கின்றன.

ஓ.பன்னீர்செல்வம் ரொம்ப நல்லவர். ஆனால், வல்லவர் இல்லை என ஸ்டாலின் வேறு கிண்டல் அடிக்கிறார். அமைச்சராக இருந்திருந்தால் பன்னீரிடம் இருந்து பதிலடி கிடைத்திருக்கும். ஆனால், இபபோதோ அமைதி. அவரின் செயறபாடுகள் எல்லாம் தலைவியைத் திருப்தி செய்வதில்தான்.

போயஸ் கார்டனுக்கு அவர் காட்டும் விசுவாசத்துக்கு ஒரு சாம் பிள் இது. முதல்வரின் வாழ்த்து இல்லாமல் கொண்டாடப்பட்ட தீபாவளி இந்த தீபாவளி தான். தலைவி ஜெயலலிதா வாழ்த்து தெரிவிக்காததால் தீபாவளிக்கு முதல்வர் ஓ.பன்னீர் செல்வமும் வாழ்த்து தெரிவிக்கவில்லை. தாடி வளர்த்து தன் வேதனையை வேறு வெளிக் காட்டி வருகிறார்.

**அதிகாரிகளின் அசட்டை!**

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அதிகாரிகள் அஞ்சி வேலை பார்ப்பார்கள். இப்போதோ அசட்டையாக இருக்கிறார்கள். இதை பன்னீரும் கண்டுகொள்வது இல்லை. ஜெயலலிதா சிறையில் இருந்த போது அவருக்கு ஆதரவாக நடந்த போராட்டங்கள் சட்டம் ஒழுங்குக்கு சவால் விட்டன. அதைப்பற்றி ஓ.பன்னீர் செல்வம் அலட்டிக்கொள்ளவில்லை.

கடந்த முறை முதல்வராக இருந்தபோது தொடர்ந்து பத்திரிகை யாளர்களைச் சந்தித்தார். இந்த முறை அவர்களைப் பார்க்காமல் ஒதுங்கிப் போய்விடுகிறார். இதே போலத்தான் அமைச்சரவைக் கூட்டமும் நடைபெறவில்லை. பொதுவாக மாதத்துக்கு ஒரு முறையாவது அமைச்சரவைக கூட்டம் நடக்கும். அதுவும் இல்லை. சட்டசபையின் மழைக்கால கூட்டத தொடர்நடப்பது வழக்கம் இந்தமுறை அது நடக்குமா எனத்தெரியவில்லை.

அம்மாவின் நிழல் அரசாங்கத்தை நடத்திவரும் ஓ.பன்னீர் செலவத்துக்கு முதல்வர் பதவி சுகம் இல்லை சுமை தான்.

பன்னீர் பெர்ஃபோமென்ஸ்
- பிரதமருக்கு கடிதங்கள்-6
- ஆய்வுக் கூட்டங்கள்-7
- தூதர் சந்திப்பு-1
- பேச்சுவார்த்தை (நெய்வேலி தொழிலாளர்கள்)-1
- கோரிக்கை கூட்டம்-1
- நிகழ்ச்சிகள் (காந்தி ஜெயந்தி, மதுரை விசிட், தேவர், ஜெயந்தி)-3
- அறிவிப்புக்கள், நிதியுதவிகள்-9
- வாழ்த்துச் செய்திகள்-14
- அறிக்கை-2
- இரங்கல் செய்தி-1
- உத்தரவுகள் (ஹெலிகொப்டர், காணாமற் போன மீனவர்கள்)-2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச்சடம்பன் குளத்தின் கீழ் விதை நெல் பயிரிடும் செயற்றிட்டம் முன்னெடுப்பு

## ஒலுமடு கமநலசேவை நிலையம் தெரிவிப்பு

(மல்லாவி)

**கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியனுசரணையுடன் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளமான தச்சடம்பன் குளத்தின் கீழ் தரிசு நிலக் காடாக இருந்து துப்புரவு செய்யப்பட்ட 50 ஏக்கர் நிலத்தில் இயற்கை பசளையை பயன்படுத்தி பரீட்சார்த்தமாக நெல் பயிரீடும் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் இடம்பெற்ற போர்ச் சூழல் காரணமாக முன்னர் பயிர் செய்கை நிலங்களாக இருந்து பின்னர் பற்றைக் காடாக மாறிய தரிசு நிலக்காடுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 600 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காட்டினை உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின்நிதியனுசரணையுடன் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் துப்புரவு செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட தச்சடம்பன் குளத்தின் கீழுள்ள 60 ஏக்கர் தரிசு நிலக்காட்டில் 50 ஏக்கர்களில் இயற்கை பசளைகளை பயன்படுத்தி தூய விதை நெல் உற்பத்தியாக்கும் பரீட்சார்த்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏக்கர் ஒன்றிற்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதியுதவியில் தரை பண்படுத்தல், விதை நெல் வழங்கல், இயற்கை பசளை விநியோகம் போன்ற உதவிகள்வழங்கப்படுகின்றன.

அத்துடன் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் விவசாயிகளுக்கான விவசாய காப்புறுதியையும் இலவசமாக செய்து கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து இத்திட்டத்தில் இணைந்துள்ள விவசாயிகள் ஆர்வத்துடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் அறுவடையாகப் பெறப்படும் தூய விதை நெல் எதிர்வரும் காலங்களில் சிறுபோக நெற்செய்கையின் போது விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இயற்கை பசளை பயன்பாட்டுடனான நெற்செய்கை திட்டம் விரிவுபடுத்தப்படுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

## அதிபர்களுக்கான ஒன்றுகூடல்

(மல்லாவி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 9 இற்கும் க.பொ.த. உயர் தரத்திற்கும் இடைப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஒன்று கூடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி கல்வி வலயத்தில் நடைபெறுமென கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார்.

எனவே அதிபர்கள் வருகை தரும் போது பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளுடன் சமூகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




## நாகபாம்பு தீண்டியவர் வைத்தியசாலையில்

(தர்மபுரம்)

நெல் மூடையில் இருந்த நாகபாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தர்மபுரம் மேற்கில் வசிக்கும் ந.ராஜி (வயது48) என்பவரே பாம்பு தீண்டிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் தனது வீட்டிலிருந்து புளியம்பொக்கணையிலுள்ள அவரது உறவினர் வீட்டிற்கு விதை நெல் எடுப்பதற்காக சென்றுள்ளார்.

உறவினர் வீட்டிலிருந்த விதைநெல்மூடைகளைஉழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டிருந்த வேளை மூடையின் மீது இருந்த நாகபாம்பு அவரை தீண்டியது.

இதனை அடுத்து குறித்த நபர் தர்ம்புரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

புளியம்பொக்கணையில் நாகதம்பிரான்ஆலயம்அமைந்திருப்பதால் தீண்டிய நாகத்தை கொல்வதற்கு எவரும் முன் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-282)

## நிலச்சரிவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் மன்னாரில் சேகரிப்பு




பதுளை கொஸ்லந்தையில் மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண பணிகளை மேறகொள்ள மன்னார் மாவட்டத்துக்கான நிவாரண பொருட்களை சேகரிக்கும் பொறுப்பினை மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் வடமாகாண முதலமைச்சர் ஒப்படைத்தார்.

அதற்கு அமைவாக நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மன்னார் தனியார் பேருந்து நிலையத்தில் அமைச்சர் தலைமையில் சர்வமத பிரார்த்தனையுடன் காவுகொளளப்பட்ட உயிர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து அமைச்சரும் பிரமுகர்களும் இணைந்து மன்னார் நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் நிவாரணப்பணிக்கான பொருட்களை சேகரித்தனர்.

நிகழ்விற்கு மன்னார் நகரின் சர்வ மதம் சார்பாக உதவிப்பங்குத்தந்தை, மன்னார் மாவட்ட போதகர் ஐக்கியத்தின் தலைவர் மற்றும் போதகர்கள், மன்னார் நகர பிதா ஞானப்பிரகாசம், துணை நகரபிதா ஜேம்ஸ் ஜேசுதாசன், நகரசபை உறுப்பினர் குமரேஸ^ம் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் அன்புராஜ் லெம்பேட், அந்தோனி மாக், மன்னார் சமாதான அமைப்புத் தலைவர், மக்கள் காதர் மற்றும் பிரமுகர்கள், மன்னார் நகர மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஒவ்வொரு விற்பனை நிலையங்களாக சென்று நிவாரண பொருட்களை திரட்டினர்.

எதிர்வரும் 05 ஆம் திகதி வரை தொடரும் இந்த பயணத்தில் தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த பொருட்களை இரண்டாம் குறுக்குத்தெரு பெட்டா மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (2)


## யாழ்தேவி புகையிரதத்தின் பயண நேரத்தில் மாற்றம்

(மல்லாவி)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து காலையில் கொழும்பு நோக்கி புறப்படும் யாழ்தேவி புகையிரதத்தின் பயண நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.புகையிரத நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை தினமும் காலை 7.25 மணிக்கு புறப்பட்ட யாழ்தேவி புகையிரதம் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தினமும் காலை 7.10 மணிக்கு புறப்படும். இந்த நேரமாற்ற ஒழுங்கு பளை புகையிரத நிலையத்திற்கும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தி இடைப்பட்ட புகையிரத நிலையங்களில் பயணத்தின் போது சிறுமாற்றம் ஏற்படுமெனவும் பயணிப்போரின் கவனத்திற்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை பளை புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு வரையிலான புகையிரத நிலையங்களில் வழமையான நேரத்திற்கு புகையிரதம் செல்லும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே பயணிப்போர் இதனை கவனத்தில் கொண்டு யாழ்.புகையிரத நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட புதிய நேர மாற்றத்திற்கு அமைவாக பயணத்தை தொடருமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (2-15)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அண்மையில் வறுமைக்கோட்டின்கீழ்வாழும்குடும்பம்ஒன்றிற்குசுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கமைய ஒட்டுசுட்டானைச் சேர்ந்த குடும்பத்திற்கு 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு வழங்கப் பட்டது. அத்துடன் இக் குடும்பத்திற்கு மாணவர்களின் கல்விச் செலவிற்காக கடந்த இரண்டு வருடங்களாக மாதம் ஒன்றிற்கு 4 ஆயிரம் ரூபா வீதம் கல்விக்கான உதவி வழங்கி வருகின்ற அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்டு வருகிறது.

## பேருந்துகளில் பயணிகளிடம் யாசகம் கேட்பவர்களை கட்டுப்படுத்துங்கள்

(மல்லாவி)

வவுனியா பேருந்து நிலையத்தில் அரச மற்றும் தனியார் பேருந்துகளில் சிறுவியாபாரத்தில் ஈடுபடுவோர் மற்றும் யாசகம் கேட்போரால் மன உளைச்சல் அடைவதாக பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா பேருந்து நிலையத்தில் யாசகம் கேட்போர் நிறுத் தப்படும் பேருந்துகளில் ஏறி பயணிகளிடம் யாசகம் தருமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

இதனால் பயணிகள் மன உளைச்சலுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

சிலர் மதுபோதையில் பேருந்தில் ஏறி யாசகம் கேட்பதோடு கொடுக்க மறுப்பவர்களை இழிவான வார்த்தைகளால் திட்டுகின்றனர்.

இதனைவிட சிறு வியாபாரிகளான கச்சான், அப்பிள், குடிநீர் போத்தல், வடை என்பவற்றை விற்பனை செய்கின்றவர்களில் குறைந்தது ஐந்து நபராவது ஒரே தடவையில் பேருந்தில் ஏறி தாம் கொண்டு வரும்வியாபாரப் பொருட்களை வாங்குமாறு பயணிகளை நிர்ப்பந்திக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு இடர்பாடுகளின் மத்தியில் பயணங்களை தொடர வேண்டிய அவல நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட பயணிகளால் குற்றம் சாட்டப்படுகின்றது.

பேருந்துகளில் யாசகம் செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகங்களில் அண்மையில் செய்தி வெளியாகியிருந்த நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது ஏன் என பயணிகளால் கேள்வியெழுப்பப்படுகின்றது.

எனவே பேருந்துகளில் யாசகம் செய்வோரை கட்டுப்படுத்தி பயணிகள் இடையூறின்றி பேருந்துகளில் பயணிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகளால் கோரிக்கை விடப்படுகிறது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.இராணுவத்துடன் மோதல் 20 தலிபான் தீவிரவாதிகள் பலி



பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் பழங்குடியின மக்கள் பெருவாரியாக வாழ்கிற வஜிரிஸ்தான் பகுதி, தலிபான் தீவிரவாதிகளின் புகலிடமாக உள்ளது.

இங்கு தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை என்ற பெயரில், அமெரிக்காவின் ஆள் இல்லா விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி வருகின்றன. இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொலலப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவுடன் 'ஜார்ப் இ ஆஜப்' என்ற பெயரில் தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையை பாகிஸ்தான் இராணுவம் கடந்த ஜூன் மாதம் மத்தியில் தொடங்கி தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த தாக்குதல்களில் இதுவரை ஆயிரத்து 100இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில், வடமேற்கு வஜிரிஸ்தானில் தன்னாட்சி பகுதியாக உள்ள ஆராக்சாய் பழங்குடியினர் பகுதி, தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிற பகுதியாக திகழ்ந்து வந்தது.

ஷிரின் தாரா என்ற இடத்தில் தலிபான் தீவிரவாதிகளை தேடும் வேட்டையில் நேற்று முன்தினம் இராணுவம் ஈடுபட்டது. அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது.

இரு தரப்பினரும் கடும் துப்பாக்கிச்சண்டையில் ஈடுபட்டனர். இந்தச் சண்டை பல மணி நேரம் நீடித்தது. முடிவில் 20 தீவிரவாதிகள் கொலலப்பட்டனர். இராணுவ வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயம் அடைந்தனர். இதன் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. (இ-5)

## உக்ரைன் உள்நாட்டுப் போரினால் 4 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்

உக்ரைனில் கிழக்கு பகுதியில் டொனனெஸ்ட்க், மின்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளில் ரஷய ஆதரவாளர்கள் மெஜாரிட்டி ஆக உள்ளனர். தங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அது உள்நாட்டு கலவரமாக மாறியது.

கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா ஆதரவு அளித்தது. இதனால் அவர்கள் இராணுவத்துடன் கடும் சண்டையில் ஈடுபட்டனர். இந்தசண்டை 6 மாதங்கள் நடந்தது. கடந்த செப்டெம்பர் மாதம் இரு தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

உள்நாட்டு போரின் போது இரு தரப்பிலும் மொத்தம் 4 ஆயிரத்து 35 பேர் பலியாகினர்.

போர் நடந்த கடைசி 10 நாட்களில் மட்டும் 400 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தகவலை; ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. (இ-5)

## தி.மு.கவுடன் கூட்டணி கிடையாது

தி.மு.கவுடன் கூட்டணி கிடையாது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார். காங்கேயத்தில் ம.தி.மு.க. நிர்வாகி கணேசமூர்த்தி இல்ல திருமண விழாவில் பேசிய வைகோ, தி.மு.கவுடன் கூட்டணி என்று ஒரு போதும் கூறியது கிடையாது என்று விளக்கம் அளித்துள்ளார்.

கூட்டணி தொடர்பாக ஊடகங்களில்தான் செய்திகள் வெளியாகின. ஸ்டாலினுடனான சந்திப்பு அரசியல் நாகரிகத்திற்கானது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விளக்கம் அளித்துள்ளார். (இ-5)


# கொங்கோ நாட்டில் தீவிரவாதியை கல்லால் அடித்து கொன்று தின்ற கும்பல்

(பெனி)

ஆபிரிக்காவில் கொங்கோ நாடு உள்ளது. அங்கு 'எ.டி.எப். நலு' என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். பொது மக்களுக்கு எதிராக கொடுஞ்செயல் புரிந்து அவர்களை கொன்று குவித்து வருகின்றனர்.

சமீபத்தில் கம்பியா சூ என்ற கிராமத்தில் புகுந்து 14 பேரை கொன்றனர். கடந்த ஒக்டோபரில் மட்டும் 107 பேரை கொன்று குவித்துள்ளனர். இதனால் அவர்கள் மீது பொதுமக்கள் கடும் ஆத்திரத்தில் உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பெனிநகரில் பொதுமக்கள் ஒரு பேருந்தில் பயணம் செய்தனர். அவர்களில் சந்தேகப்படும் நிலையில் ஒருநபர் பயணம் செய்தார். அவர் ஒரு தீவிரவாதி என பயணிகள் சந்தேகப்பட்டனர்.



அவரிடம் 'ஸ்வாகிலா மொழியில் பல கேள்விகளை கேட்டனர். அவனால் அதற்கு பதில் சொல்ல தெரியவில்லை. எனவே அவன் தீவிரவாத குழுவை சேர்ந்தவன் என முடிவு செய்தனர்.

பின்னர் கும்பலாக சேர்ந்து அந்த நபரை பேருந்திலிருநது 'தரதர'வென வெளியே இழுத்து வந்தனர். பின்னர் அவரை கல்லால் அடித்து கொன்றனர்.

அத்துடன் அவர்களது ஆத்திரம் தீரவில்லை. அவரது உடலை தீவைத்து எரித்தனர். பிறகு அவரது உடலின் சில பாகங்களை தின்றனர். இச்சம்பவம் மிகவும் கொடூரமாக இருந்தது.

இதற்கிடையே, அடித்து கொல்லப்பட்ட நபர் ஜோசப் கபிலா என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் தீவிரவாதியா என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (இ-5)

# 39000 ஆண்டு பழைமையான மாமூத் படிமம் ரஷ்யாவில் மக்களின் பார்வைக்கு வந்தது



(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள ரஷ்யன் பூகோள ஆய்வுத்துறையினர் தங்கள் ஆய்வுத்துறையில் 39 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினமான மாமூத்தின் படிமத்தை மக்களின் பார்வைக்கு வைத்தனர். 2010ஆம் ஆண்டில் சைபீரியன் பனிமலைப்பகுதியில் பனி பாறைகள் மூடிய நிலையில ஓர் புதை படிமம் கண்டெடுக்கப்பட்டது. அந்த படிமத்தின வடிவம் யானை போன்று இருந்தது. இதனை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் 39 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மாமூத் விலங்கினத்தின் படிமம் ஆகும். இந்த விலங்கினத்தின் மூளை மற்றும் உடலமைப்பு அப்படியே சிதைந்து விடாமல் பனியினால் இவ்வளவு ஆணடுகளும் பாதுகாப்பாக இருந்து வந்திருக்கிறது.

இந்த விலங்கினம் தனது 10 ஆவது வயதில் உயிரிழநதிருக்கலாம் என கணித்துள்ளனர். தற்போது இதன் படிமத்தை 4 ஆண்டுகள் ஆய்வுக்கு பின்னர் தற்போது மொஸ்கோவில்உள்ள பூகோள துறையின் ஆவண காப்பகத்தில் மக்களின் பார்வைக்கு வைத்துள்ளனர்.

மாமூத் (Mammbth) என பன பூமியில் 4.8 மில் லியன் ஆணடுகளுக்கு முன்பு வாழ்ந்த எலி பெண்டியா என்ற உயிரியல் குடும்பத்தினை சேர்ந்த ஓர் உயிரினம் ஆகும்.

எலிபெண்டியா என்பது பிரோபாக்சிடியா என்ற உயிரியல் குடும்பத்தின துணை குடும்பம் ஆகும்.

இந்த மாமூத்துகளுக்கும் தற்கால யானைகளுக்கும் நெருங்கிய படிம வளர்ச்சித் தொடர்பு உள்ளது.

மாமூத்துகளுக்கு தற்போதுள்ள பெரிய யானைகளை விட பெரிய தந்தங்கள் உண்டு. மேலும் இதன் உடல் அடர்ந்த மயிர்களால் மூடப்பட்டும் காணப்பட்டது. மாமூத் என்கிற வார்த்தை யானது மன்சி என்ற ரஷ்ய மொழியில் இருந்த mambht என்ற சொல்லிலிருந்து திரிந்து வந்ததாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஐம்பது பழங்குடியினரைக் கொலை செய்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெறியாட்டம்

ஈராக்கில் 50 பழங்குடியின மக்களை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் முக்கிய நகரங்களை பிடித்து வைத்திருக்கின்றனர். அத்துடன் பல எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொணடு வந்துள்ளனர்.

கடததல்க்சாய் எண்ணெய் விற்பனை மூலம்தான் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் இப்போது ஈராக்கிலும், சிரியாவிலும் அமெரிக்க தாக்குதல்களை எதிர்கொண்டு வரு கின்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் கொடூரம் மேலும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் 50 இற்கு மேற்பட்ட பழங்குடியின மக்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். இதில் பெண்களும் அடங்குவர்.

இதுதொடர்பான அதிகாரபூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி கள இந்த கொடூர தாக்குதலில் 86 பேர் பலியாகினர் என்று மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது.

மாகாணத்தின் ராஸ் அல்-மா கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று இந்த சம்பவம் நடைபெறறுள்ளது. அன்பார்டவுனை தீவிரவாதிகள் கைப்பற்றியதை அடுத்து பழங்குடியின மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். அவர்கள், தீவிரவாதிகளுக்கு எதிராக செயறபட்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

தற்போது பழங்குடியின மக்கள் வசித்த பகுதியை தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# எல்லையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதை தடுக்க முடியாது

## சீனாவுக்கு இந்தியா பதிலடி

இந்திய எல்லைப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு எங்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. இதை யாராலும் தடுத்து நிறுத்த முடி யாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

அருணாசலப் பிரதேச மாநிலததில் சீன எல்லையை ஒட்டிய பகுதிகளில் வீதி அமைக்க முடிவு செய்திருப்பதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், இந்தியா இவ்வாறு பதில் கூறியுள்ளது.

இதுதொடர்பாக டில்லியில மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் தெரிவிக்கையில்,

கடந்த 60 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படாத உட்கட்டுமானப் பணிகளை இந்தியா தற்போது மேற்கொள்ளவுள்ளது. எனது அறிவிப்பால், சீனாவுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. எனது பணிகளை நான் செய்வதை அவர்களால் தடுக்க முடியாது.

இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியில் தான், உட்கட்டுமானங்களை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சீனப் பகுதியில் எந்தப் பணியையும் செய்யப் போவதில்லை. அருணாசலப் பிரதேச மாநிலத்தில் இருந்து, நான் எம்.பி. யாக தேர்வு செய்யப்பட்டுள்ளேன். அதுவும் அரசமைப்பு சட்ட ரீதியாக நான் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறேன். ஆகையால், நமது பகுதியில் பணிகளை மேற்கொள்வதற்கு எனக்கு அரசமைப்பு ரீதியிலான கடமையும் உரிமையும் உள்ளது என்றார் அவர்.

மக்மோகன் கோட்டையொட்டி சீனா புகையிரத பாதை அமைக்கத் திட்டமிட்டுள்ளது குறித்து ரிஜிஜுவிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில், இது ஒன்றும் புதிது அல்ல. இதை நீண்ட நாட்களாக அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர் என்றார்.

பின்னணி: அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய ரிஜிஜு, சீனாவையொட்டிய அருணாசலப் பிரதேச மாநில எல்லைப் பகுதிகளில் வீதி அமைக்க இந்தியா முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த அறிவிப்புக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதுதொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், சீனா-இந்தியா இடையேயான கிழக்கு எல்லை தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. இதற்கு இறுதித் தீர்வு காண்பதறகு முன்பு, அந்த விவகாரததை மேலும் சிக்கலாக்கும் வகையில் இந்தியா எந்தப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவித்திருந்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுச் சந்தையில் குடிநீர் வசதியில்லை

(பருத்தித்துறை)


கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மண்டான் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் பொதுச் சந்தைக்கு அடிப்படை .தேவைகளான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் இல்லையென வியாபாரிகளும் நுகர்வோர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தையில் உள்ள வியாபாரிகளும் சந்தைக்கு வரும் நுகர்வோரும் பெண்களாக இருப்பதால் அவர்களது தேவைக்காக மலசலகூடம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

அத்துடன் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் சந்தை வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

குறித்த சந்தை தொகுதி ஆரம்பத்தில் சிறு சந்தையாக காணப்பட்டது. இந்நிலையில் தற்போது கட்டடங்கள் கட்டப்பட்டு புதிதாக சந்தை அமைக்கப்பட்டு வருகிறது.

இதே வேளை மலசலகூடம், குடிநீர் வசதி என்பன இல்லையெனில் சந்தை வியாபாரிகள் மட்டுமல்லாது சந்தைக்கு வரும் நுகர்வோரும் பல சிரமங்களை எதிர்நோக்குபவர்களாக காணப்படுவர். எனவே இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என சந்தை வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7-10)





# பொருத்தமான திட்டங்களுக்கே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது

## அமைச்சர் ஐங்கரநேசன் விளக்கம்

ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேவைகள் இவற்றில் முன்னுரிமை பெறவேண்டிய தேவைகள், மாவட்டத்துக்குப் பொருத்தமான திட்டங்கள், மாவட்டத்தின் சனத்தொகை போன்ற பல்வேறு காரணிகளையும் விரிவாக அலசி ஆராய்ந்த பின்னரே நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்றோம் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை தமிழர்களின் பூர்வீகத் தாயகமான வடக்கு கிழக்கை நிர்வாக ரீதியாகப் பிரித்து வைத்திருக்கும் பேரினவாத இலங்கை அரசு, இப்போது வடக்கின் மாவட்டங்களுக்கிடையில் பிரதேச வாதத்தைத் தூண்டி அவற்றையும் பிளவுபடுத்தும் திரைமறைவு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இம்முயற்சிகளில் ஒன்றாகவே, வடக்கு மாகாணசபை நிதியை ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டுகிறது என்றும், முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படுகிறது என்றும் எல்லா மாவட்டங்களுக்கிடையிலும் நிதி சமமாகப் பகிரப்படவேண்டும் என்றும உண்மைக்குப் புறம்பாகத் தீவிரமான பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.





வடமாகாண மரநடுகை மாதத்துக்கான தொடக்க நிகழ்ச்சி நேற்று முன்தினம் நாரந்தனை கணேச வித்தியாலத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண மரநடுகை மாதத்தின் தொடக்க நிகழ்ச்சியாக நாரந்தனையில் விவசாயக் காடுவளர்ப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனது அமைச்சுக்கு இந்த ஆண்டில் விவசாய அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள நிதி 60 மில்லியன் ரூபாய். இதில் கிளிநொச்சிக்கு 8.38 மில்லியனையும், மன்னாருக்கு 10.53 மில்லியனையும், வவுனியாவுக்கு 11.03 மில்லியனையும், யாழ்ப்பாணத்துக்கு 11.48 மில்லியனையும் பகிர்ந்தளித்துள்ளோம்.

ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி 18.58 மில்லியன் ரூபாய். இதே போன்றுதான், மாகாணசபையை நாம் பொறுப்பேற்ற ஒருவருடத்தில் நீர்ப்பாசனத் திணைக்களங்களினூடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கே மிகப் பெருமளவு நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் கடந்த ஒருவருடத்தில் 2 இலட்சத்து 66 ஆயிரத்து 443 மில்லியன் ரூபாய்களுக்கான நீர்ப்பாசன வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது வடக்கு மாகாணத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் 62 வீதம். உண்மைகள் இவ் வாறு இருக்க, முல்லைத்தீவு மாவ ட்டத்துக்குக் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகின்றதெனில், இதன் பின்னணி பற்றி யாரும் சந்தேகிக்காமல் இருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்கள் இ.ஆனல்ட், பா.கஜதீபன், எம். கே. சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம், ச. சுகிர்தன், விவசாய அமைச்சின் செயலாளர் யு. எல். எம் ஹால்தீன், மாகாண விவசாயப்பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ)

## பரீட்சையில் சித்தியடைந்தோர்

யா/கச்சாய் அ.த.க. பாடசாலையைச் சேர்நத 3 மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பா.சாயிராம்-185, சி.நுஜந்தன்-176, த.விஷாலன்-161 ஆகிய மாணவர்களே சித்தியடைந்துள்ளனர். (இ

## சைவ சமயதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் ஆண்டு தோறும் நடைபெறும் சைவ சமயதீட்சை வழங்கும் நிகழ்வு ஐப்பசி வெள்ளி 14ஆம் திகதி காலையில் சபை மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என சபைச் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் தத்தமது பாடசாலையில் சைவ சமய தீட்சை வழங்க விரும்பின் சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.(இ




## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி கல்விக்கோட்டத்தின் மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-7-10)

## தமிழ் பாடத்திற்கான இலவச கருத்தரங்கு

(சாவகச்சேரி)

மீசாலை உயர் கலைக் கல்லூரியின் முழு நிலாக்கருத்தரங்கில் க.பொ.த. உயர்தர கலைத்துறை மாணவர்களுக்கான தமிழ் பாடத்திற்கான கருத்தரங்கு எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களும் இலவசமாக பங்குபங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளலாம் என கல்லூரியின் இயக்குநர் எஸ்.வீரசுதாகர் அறிவித்துள்ளார். (இ-7-29)

# தொழில் முயற்சி தொடர்பான பயிற்சி செயலமர்வு

யாழ்ப்பாணம் வர்த்தகம் தொழிற்துறை மன்றமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபாரத்துறையினரின் நலன் கருதி தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பான முழுநாள் பயிற்சி செயலமர்வு ஒன்றினை இலங்கை வர்த்தக மன்றத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் .பிரபல சுற்றுலா விடுதியில் நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சிகளின் தேவையறிந்து பொருத்தமான வழிகாட்டல்களுடன் கூடிய செயலமர்வாகவும் தொழில் முயற்சியினை நிலைத்து நிற்கக் கூடிய வகையில் எவ்வாறு முகாமை செய்வது என்பது தொடர்பாகவும் மிகச்சிறந்த வளவாளர்களால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தொழில்நுட்ப அறிவு, தொழில் முயற்சி தொடர்பான திறன்கள், நிதி முகாமைத்துவம், சுற்றாடலுக்கு பொருத்தமான வகையில் தொழில் முயற்சியினை நிலைத்து நிற்கக்கூடியதாக முன்னெடுத்தல் என்பதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முய ற்சிகள், வங்குரோத்து நிலைக்குள்ளாதல் மற்றும் அவர்கள் தமது கடன் களை செலுத்த முடியாத அபாயம், புதிய தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சியினை ஆரம்பிக்க வும், நிதி வசதிகளைப் பெற்றுக் கொள் வதற்கும் அவசியமான அறிவினையும் பல்வேறு வழிகாட்டல்களும் வழங்கப் படவுள்ளன. சிறியளவிலான தொழில் முயற்சி ஒன்றினை முன்னெடுத்து வருபவர்களுக்கும் மேற்படி நிகழ்வு பொருத்தமுடையதாகும். காலத்தின் தேவையுணர்ந்து மேற்படி செயலமர்வானது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

எனவே சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையினர், வியாபாரத்துறையினர் மேற்படி பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு இல.124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்பதுடன் 0212226609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை காரணமாக பங்குபற்ற விரும்பும் தொழில் முய ற்சியாளர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை உறுதிப்படுத்தி இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டவன் தறிக்கலாம்
வந்தவன் தறிக்கலாமோ!
– சுந்தரனார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பூமித்தாயை குளிர்மைப்படுத்தி மனம் குளிர்ந்த மனிதராய் வாழ்வோம்

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

கார்த்திகை மாதம் என்பது மழை பெய்து நிலமகள் குளிர்ந்திருக்கும் காலம். இக்காலம் மரநடுகைக்கு உரியதும் உகந்ததுமாகும்.

ஒருகாலத்தில் மரநடுகை பற்றிய விழிப்புணர்வுகள் தேவையற்றவையாக இருந்தன. அந்தளவுக்கு மரநடுகையில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஆனால் இன்றைய இளஞ் சந்ததியினர் மரத்தின் முக்கியத்துவம், அதன் பயன்பாடு குறித்து எதுவித அக்கறையும் கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு மரநடுகை மாதமாகக் கார்த்திகை மாதத்தை பிரகடனப்படுத்தி, வடக்கு மாகாணம் முழுவதிலும் மரநடுகைத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பது காலம் உணர்ந்த சேவையாகும்.

எமது இயற்கைச் சூழல் என்பதன் அடிப்படை மரத்திலிருந்தே ஆரம்பமாகிறது. ஒரு காலத்தில் மக்கள் மரங்களை வழிபாடு செய்தனர். இதன் காரணமாகவே ஒவ்வொரு இந்து ஆலயத்திற்கும் தலவிருட்சம் என்பது பிரகடனமாயிற்று.

ஆலயங்கள் தோறும் தலவிருட்சங்கள் பிரகடனப் படுத்தப்பட்டு அவை ஆலயச் சூழல் முழுவதிலும் நாட்டப்பட்டன.

கூடவே அந்தத் தலவிருட்சங்களில் இறைவன் குடியிருப்பதான ஐதீகங்களுடன் வழிபாடுகளும் நடத்தப்பட்டன.

வீதியின் இரு மருங்கிலும் ஆல மரங்கள், அரச மரங்கள் என நிழல் தரும் விருட்சங்கள் நாட்டப்பட்டதுடன் அங்கு வழிபாடு செய்யக்கூடியவாறு தெய்வ விக்கிரகங்களும் நிறுவப்பட்டன.

இதன் நோக்கம் வழிபாடு என்பதற்கப்பால், நிழல் தரும் மரங்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதும் அந்த இடங்களில் தூய்மை பேணப்படுவது அவசியம் என்ற நோக்கிலும் இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதேநேரம் நிழல் தரும் மரங்கள் பூமி வெப்பம் அடைவதைத் தடுப்பதுடன், சீரான மழை வீழ்ச்சிக்கும், மனித உடல்நல ஆரோக்கியத்திற்கும் உதவுவனவாக இருப்பதை மையமாக வைத்து நம் முன்னோர் மரநடுகைகளை தாங்களாகவே உணர்ந்து மேற்கொண்டனர்.

தாங்கள் நாட்டிய மரங்களை வளர்த்தெடுப்பதற்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம். எனினும் தாம் நட்ட மரங்களின் வளர்ச்சி, அவற்றின் நிழல் பரப்பும் அழகு என்பவற்றில் சொக்கித் திளைத்து பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் மறந்து போயினர்.

இது தவிர மரங்கள் வருமானம் தரும் பொக்கிஷங்கள் என்பதை நாம் மறந்துவிடுவது மிகப்பெரும் அபத்தம்.

காணி நிலம் வேண்டும் பராசக்தியெனஅன்னை சக்தியிடம் வேண்டுதல் விடுத்துப் பாடிய பாரதியார், அந்தக் காணியில் தென்னை மரங்களும் வேண்டும் என்றார்.

தென்னை மரத்தின் பயன்பாட்டை நாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்க மாட்டாது. எனினும் எங்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் எங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறாக, தென்னை மரங்களை நட்டோமா? என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

வானம் பார்த்த பூமியாக நாம் வாழும் மண்ணிருந்தால், நாங்களும் வெம்மையின் தாக்கத்திற்கு ஆளாகி கடுங் கோபம் கொள்பவர்களாக – வெறுப்புடையவர்களாக மாறுவோம் என்பது நிச்சயம்.

எனவே நாங்கள் வாழும் மண்; மரங்கள் விரித்த குடையின் கீழ் இருக்க வேண்டும். அதுவே எங்கள் மனநிலைக்கு இதமாக அமைந்து எங்கள் வாழ்விற்குப் பெரும் சுகந்தம் தரும் ஆகையால் ஒவ்வொருவரும் மரநடுகைத் திட்டத்தில் இணைந்து பூமித்தாயை குளிர்மைப் படுத்தி நாமும் குளிர்ந்த மனத்தினராய் வாழ்வோம்.

# 300 மில்லியன் ரூபா செலவில் முக்கொம்பன் பிரதேசத்திற்கு மின்சாரம்

## மின் பிறப்பாக்கியை இயக்கி வைத்தார் சந்திரகுமார்

(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முக்கொம்பன் பிரதேசத்திற்கு இன்று (நேற்று) மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 400 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

இதேவேளை சின்னப் பல்லவராயன் கட்டு, நேரம்பன் ஆகிய கிராமங்களுக்கு மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் பிறப்பாக்கி பொருத்தப்பட்ட பின்னர் அனைவருக்கும் மின்சாரம் கிடைக்குமென பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மின்பிறப்பாக்கியை நேற்றைய தினம் பிற்பகல் 12.30 மணியளவில் இயக்கி வைத்து பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி மின்பிறப்பாக்கியினை சந்திரகுமார் எம்.பி மற்றும் பூநகரி பிரதேச சபை உறுப்பினர் குபேந்திரன் ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்தனர்.

அதன்பின்னர் சந்திரகுமார் எம்.பி மின்பிறப்பாக்கியை இயக்கி வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இவ்வேலைத்திட்டம் 300 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு ஆரம்ப சுகாதார வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருமாறு இம்மக்கள் கேட்டிருந்தனர்.

வைத்தியர் பற்றாக்குறை காரணமாகவே இப்பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார வைத்தியசாலையை அமைத்துத் தரமுடியாதுள்ளது.

இச்சுகாதார வைத்தியசாலையை அமைத்தால் முக்கொம்பன் பிரதேசம் முழுமைபெறும்.

இந்நிகழ்வில் பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கணனி அறையை திறந்து வைத்துடன் கட்டப்பட்ட கட்டத்தினையும் அவர் திறந்து வைத்தார்.

இதேவேளை பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்திய கருவியையும் அவர் வழங்கி வைத்தார். (2-283)

## எனது மகனை மலர்ச்சாலைக்கு கொண்டு செல்லவும் தயங்கேன் மேர்வின் கூறுகிறார்

வெளிநாட்டுப் பிரஜையொரு வருடனான மோதலின் போது காயமடைந்த தனது மகன் மாலக்க சில்வாவை, மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தனது மகனை குணப்படுத்த முடியாவிடின், அவரை மலர்ச்சாலைக்கு கொண்டுசெல்லவும் தான் தயார் எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மாலக்க சில்வாவை, பொலிஸார் கைது செய்வதற்கு முன்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தேக நபர் விளக்கமறியலில்

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில், ஒரு தொகை தேங்காய்களை திருடியதாகக் கூறப்படும் சந்தேக நபரை இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா கடந்த வெள்ளிக்கிழமை 31ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

கேப்பாப்பிலவு பிரதேசத்திலுள்ள குறித்த தோட்டத்தில் சந்தேக நபரும் மற்றுமொரு நபரும் சேர்ந்து தேங்காய்களை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த இரு சந்தேக நபர்களும் தேங்காய்களை திருடிச் செல்வதை அவதானித்த தோட்டத்தில் பணிபுரியும் முதியவர் ஒருவர் இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களில் ஒருவரை கடந்த 30ஆம் திகதி மாலை கைது செய்துள்ளனர். மற்றையவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் தலைமறைவாகியுள்ள இரண்டாவது சந்தேக நபரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட முதலாவது சந்தேக நபரை கடந்த 31 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (2)

## புலமைப்பரிசில் உதவித்தொகையை பெற்றுக்கொள்ளுங்கள்

### கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

(மல்லாவி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2013ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களில் இது வரை காலமும் புலமைப்பரிசில் உதவித் தொகையினை பெறாத மாணவர்கள் காலம் தாழ்த்தாது கிளிநொச்சி கல்வி வலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2013ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் இதுவரை புலமைப் பரிசில் உதவித் தொகை பெறாதவர்கள் தாம் கல்வி பயிலும் பாடசாலை அதிபர் ஊடாக மேற்படி வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னை விட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"

-தோமஸ் ஃ புல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வினைப்பயன்



கூர்ந்து பார்க்கின்றபோது ஒவ்வொரு செயலுக்கும் விளைவு இருக்கின்றது என்பது நிச்சயமாகப் புலனாகும். ஒரு சில செயல்களுக்கு விளைவு விரைவில் தெரிவதில்லை. காரணம் என்னவென்றால் மனிதனுடைய ஆயுள் சொற்பம்– ஒரு குறிப்பிட்ட எல்லை உடையது. சில செயல்கள் நீண்டகாலத்திற்குப் பின்விளைவாக வரலாம். அதுவரையிலே அறிவை நீட்டிப் பார்க்கவோ, வயதைக்கூட்டிப் போடவோ முடியாது.

அதனால் சாதாரண அறிவு நிலையில் மனிதன் ஒரு முனையை விட்டுவிட்டு ஒரு முனையை மட்டும் பிடித்துக்கொள்கின்றான். செயலை மட்டும் எடுத்துக் கொள்கிறான்.

விளைவே இல்லை என்று எண்ணுகின்றான்; அல்லது விளைவை மட்டும் எடுத்துக்கொள்கிறான். அதற்குரிய காரணம் பிடிபடவில் லையே என்று சொல்லுகின்றான். இவ்வாறு பகுதிப்படுத்தப்பட்ட நிலையிலே வினைப்பயன் என்பதே பொய்யான தத்துவம் என்று குறுகிய மனத்தாலே முடிவு கட்டி விடுகின்றான்.


எந்தச் செயலைச் செய்தாலும் விதையைப் போட்டால் நான்கு நாட்களிலோ, நான்கு வாரங்களிலோ முளைப்பது போல, அந்தச் செயலுக்கு ஒரு விளைவு நிச்சயமாக உண்டு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு, தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் இந்த ஆறு குணங்கள் வயப்பட்டு மனிதன் செய்கின்ற செயல்களெல்லாம் அவனிடமே பதிந்து, பதிந்து, பதிந்து மீண்டும் அந்தச் சக்தி உந்தி எண்ண அலைகளாகவோ, செயல் வடிவங்களாகவோ வந்துகொண்டுதான் இருக்கும்.

அப்படியே வந்துவிட்டால் அதே எண்ணப் பதிவுகள் மீண்டும் மீண்டும் பதிந்து எழுந்து செயல்வடிவம் பெற்றுக் கொண்டே இருப்பதால் மனிதன் துன்ப வயப்படுகிறான். அதிலிருந்து மீட்டுக் கொள்ள முடியாமல் தவிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டி;

# முதல் வெற்றியை பதிவு செய்தது கோவா





டில்லி அணியை வீழ்த்தி முதல் வெற்றியைபெற்றுகோவா. இந்தியன்சுப்பர்லீக்காற்பந்து போட்டி (ஐ.எஸ்.எல்) இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடை பெற்று வருகிறது.

8 அணிகள் பங்கேற்றுள்ள இந்த போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கோவாவில் உள்ள படோர்டாவில் நடை பெற்ற 18 ஆவது லீக் ஆட்டத்தில் எப்.சி. கோவா-டில்லி டைனமோஸ் அணிகள் மோதின.

போட்டி தொடங்கிய 7 ஆவது நிமிடத்தில் டில்லி அணியைச் சேர்ந்த ஜுங்கர் முதல் கோலை அடித்தார். இதனால் டில்லி அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. அதன்பின் இரண்டு அணி வீரர்களும் கோல்கள் அடிக்க முயன்றனர். ஆனால் முதல் பாதி நேரத்தில் அவர்களால் கோல்கள் அடிக்க முடியவில்லை.


இடைவேளைக்குப் பிறகு களம் இறங்கிய கோவா அணி வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடினார்கள்.

அதன் பயனாக 73 ஆவது மற்றும் 94 ஆவது நிமிடத்தில் ராஜா, ஒஸ்பே ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். இதனால் கோவா 2:1 என்ற கணக்கில் டில்லி அணியை வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் கோவை அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. தோல்வியை சந்திக்காத டில்லி அணிக்கு இது முதல் தோல்வியாகும். (க)

# உலக டெனிஸ் போட்டி

# தாமஸ் பெர்டிச் தகுதி



பாரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டெனிஸ் போட்டி பிரான்சில் நடந்து வருகிறது. இதில் நடந்த ஒற்றையர் காலிறுதியில் 5 ஆம் நிலை வீரர் செக்குடியரசின் தாமஸ் பெர்டிச், தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சனை எதிர்கொண்டார். 2 மணி 34 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் பெர்டிச் 6-7 (4), 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறினார். அடுத்து அவர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) அல்லது மிலோஸ்ராவ்னிக் (கனடா) ஆகியோரில் ஒருவரை சந்திப்பார். இந்த வெற்றியின் மூலம் 29 வயதான பெர்டிச், லண்டனில் எதிர்வரும் 9ஆம் திகதி தொடங்கும் 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார். (க)

# கால் இறுதியில் ஜோகோவிச்



பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெறும் பிஎன்பி பாரிபா மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் விளையாட நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் (செர்பியா) தகுதி பெற்றார்.


மூன்றாவது சுற்றில் உள்ளூர் வீரர் கேல் மான்பில்சுடன் மோதிய ஜோகோவிச் 6-3, 7-6 (7-2) என்ற நேர் செட்களில் வென்று கால் இறுதிக்கு முன்னேறினார். மற்றொரு 3 ஆவது சுற்றில் சுவிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் 6-4, 6-4 என்ற நேர் செட்களில் லூகாஸ் பவுல்லியை (பிரான்ஸ்) வீழ்த்தினார்.

ஜப்பான் வீரர் கெய் நிஷிகோரியுடன் மோதிய ஜோ வில்பிரைடு சோங்காவும் 1-6, 6-4, 4-6 என்ற செட் கணக்கில் தோற்று வெளியேறியதால் பிரான்ஸ் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு கால் இறுதியில் விளையாட இந்தியாவின் லியாண்டர் பயஸ் - ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா ஜோடி தகுதி பெற்றது. கால் இறுதியில் நம்பர் 1 ஜோடியான அமெரிக்க சகோதரர்கள் பாப் பிரையன் - மைக் பிரை யன் ஜோடியை பயஸ் ஜோடி எதிர்கொள்கிறது. மற்றொரு கால் இறுதியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா - டேனியல் நெஸ்டர் (கனடா) ஜோடி அவுஸ்திரேலியாவின் மார்சின் - ஜர்கன் ஜோடியுடன் மோதுகிறது. (க)

# மாஸ்டர்ஸ் டெனிஸ்

# பெடரர் அதிர்ச்சி தோல்வி




மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடரின் அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பாரிசில் ஆண்களுக்கான மாஸ்டர்ஸ் டெனிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் நம்பர் 2 வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர், தரவரிசையில் 10ஆவது இடத்திலுள்ள கனடாவின் மிலோஸ் ரவோனிச்சை எதிர்கொண்டார். முதல் செட்டை 6:7 என இழந்த பெடரர், இரண்டாவது செட்டையும் 5:7 என பறிகொடுத்தார். முடிவில் பெடரர் 6:7, 5:7 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்தார். மற்றொரு போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச் 7:5, 6:2 என இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை வீழ்த்தினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நெருங்குகிறது பாகிஸ்தான்



அணித் தலைவர் மிஸ்பாவின் 28 வருட கால சத சாதனையும், அணி வீரர்களின் துல்லியமான பந்துவீச்சும் இணைந்து அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அபுதாபியில் நடைபெறும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியை மிகப்பெரிய வெற்றியை நோக்கி நேற்றைய 4 ஆம் நாள் நிறைவில் தள்ளியுள்ளது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணிக்கு 20 வருடங்களுக்கு பின்னர் ஆஸி அணியுடனான டெஸ்ட் தொடரை கைப்பற்றும் வாய்ப்பும் பிரகாசமாகியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதனடிப்படையில் தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 261 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

309 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 3 ஆம் நிறைவில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 61 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய 4 ஆம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, ஆஸி வீரர்களின் பந்துகளை இலகுவாக எதிர்கொண்டது.

குறிப்பாக அணித் தலைவர் மிஸ்பாவின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அவர் ஆஸி வீரர்களின் பந்துகளை பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் விரட்டுவதிலேயே குறியாக இருந்தார். இதனால் ஓட்டங்கள் மலைபோல குவியத் தொடங்கியது.

ஸ்மித்தின் ஒரு ஓவரில் 22 ஓட்டங்களை விளாசியதுடன், 21 பந்துகளில் தனது அரைச் சதத்தை கடந்தார். இதனுடன் நின்றுவிடாது தனது அதிரடி வேட்டையைத் தொடர்ந்த அவர் 56 பந்துகளில் சதத்தை பூர்த்தி செய்து விவியன் ரிச்சர்ட்ஸ் வசமிருந்த 28 வருட கால சாதனையையும் சமன் செய்தார்.

மறுமுனையில் அசார் அலி 2 ஆவது இன்னிங்ஸிலும் சதமடிக்க, பாகிஸ்தான் அணி தனது இன்னிங்ஸை 3 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்கள் எடுத்து இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பில் மிஸ்பா, அசார் அலி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 101, 100 ஓட்டங்களை எடுத்தனர்.


603 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி வழமை போன்று தனது விக்கெட்டுக்களை அடுத்தடுத்து தாரைவார்த்தது.

எனினும் வோர்னர் நம்பிக்கை தரும் விதமாக ஆடிக் கொண்டிருந்த போதிலும், ஹபீஸின் பந்தில் தேவையில்லாத சொட்டுக்கு ஆசைப்பட்டு 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய 4 ஆம் நாள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைஎடுத்துள்ளது.

களத்தில் ஸ்மித் 38, மார்ஷ் 28 ஓட்டங்களுடன் உள்ளனர்.

போட்டியின் 5 ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும்.



# இலங்கையை எளிதில் வீழ்த்தியது இந்தியா

## தவான், ரஹானே சதம்



தவான், ரஹானே இணையின் அசத்தலான துடுப்பாட்டத்தினால் இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி இலகுவான வெற்றியைப் பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒருநாள் போட்டி நேற்று கட்டாக்கில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணிக்கு, ஷிகர் தவான் (113) - அஜின்கியா ரஹானே (111) இணையின் சிறப்பான ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டமும் (231), 200 ஆவது போட்டியில் விளையாடிய ரெய்னாவின் (52) அதிரடி அரைச் சதமும் கைகொடுக்க,

50 ஓவர்களின் நிறைவில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 363 ஓட்டங்களை எடுத்தது.

364 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி, முன்னணி வீரர்கள் போதியளவு பிரகாசிக்காமையால் 39.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இலங்கை அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஓரளவு பிரகாசித்த மஹேல ஜெயவர்த்தன 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் இஷாந்த் சர்மா 34 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக இந்திய அணியின் ரஹானே தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி வரும் 6 ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகிறது.


# மரண அறிவித்தல்



## திருமதி செல்லையா செல்லம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு கிருஷ்ணன் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா செல்லம்மா நேற்று (02.11.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற உலகநாதன், காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் தேவசேனா (இந்தியா), ஜெகநாதன் (ஜெயம் - சுவிஸ்), மோகனதாஸ் (சுவிஸ்), ஜெகசோதிநாதன் (ராசன் -சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.11.2014 புதன்கிழமை காலை 10 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0217900288

கோப்பாய் வடக்கு,
கிருஷ்ணன் கோயிலடி.
(224)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல் அறிவிப்பின் பின்னே...

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப் பட மாட்டாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்த லில் ரணில் விக்ரமசிங்க ஜனாதி பதி வேட்பாளராக போட்டியிட்டால் ஆதரவளிக்க முடியாது என குறிப் பிட்டுள்ளது.

பொது வேட்பாளராக ரணில் நிறுத்தப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவினை எதிர் பார்க்க முடியாது என இரா.சம் பந்தன் தெரிவித் துள்ளார்.

ரணில் விக்ர மசிங்கவிற்கு ஆதரவளிக்கப்பட மாட்டாது என மாதுளுவாவே சோபித தேரரும் தெரி வித்துள் ளார்.

இரண்டுதரப பினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடியாகவே இந்த விடயத்தை அறிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி வேறு ஓர் வேட்பாளரை நிறுத் தினால் ஆதரவளிக்கத் தயார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு காரணமாக ஐக கிய தேசியக் கட்சியில் குழப்ப நிலை மை ஏற்பட்டுள்ளது. யாரை பொது வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக் கப்படவில்லை என தெரிவிக்கப்படு கிறது. இதேவேளை, ஐக்கிய தேசியக கட்சியின் பொது வேட்பாளர் தாமே என ரணில் விக்ரமசிங்க பகிரங்க மாக அறிவித்துள்ளார்.

ரணிலுக்கு ஆதரளிக்கப்படும் என சஜித் பிரேமதாசவும் அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ஊகங்கள் வெளியிடப் படுகின்ற போதிலும் தமது உத்தி யோகபூர்வ அறிவிப்பு தேர்தல் அறி விப்பின் பின்பே வெளியாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறி வித்துள்ளது. (எ-8)

## ஜனாதிபதித் தேர்தலில்...

இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது தொடர்பாகவே அவரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிர மசிங்க ஆகியோருடன், மூன்றாவது வேட்பாள ராகவே அவரைப் போட்டியிடுமாறே கட்சிகள் கோரியுள்ளன.

இதேவேளை, எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மாதுளுவாவே தேரருக் கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்து வதற்கு ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் முயன்று வருகின்றன எனவும் தெரியவரு கின்றது.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டி யிடுவதற்கு தேரர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துவருகிறார்.

இந்த நிலையில் பொருத்தமான பொது வேட்பாளர் ஒருவரை இனங்கண்டால், தான் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று ரணில் விக்கிரமசிங்க, தனக்கு நெருக்கமான வட்டாரங்களிடம் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது. (எ-8)

## மற்றொரு சடலம் மீட்பு...

விகள் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சரிந்து விழுந்த மலையின் மண் வீடு களுக்கு மேலால் 25 அடிகள் மூடப்பட்டுள்ளது. இதன்கீழ் இருந்தே இந்த சடலம் மீட்கப்பட் டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று குறிப்பிட் டுள்ளது.

மேலும், கொஸ்லந்தை மீரிய பெத்த பிரதேசத்திற்கு பொதுமக்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மண் சரிவு ஏற்பட்ட இடத்தினைப் பார்வையிடு வதற்கு அதிகளவான மக்கள் வாகனங்களில் செல்வ தாகவும் அந்த வாகனங்களை மீண்டும் திருப்பியனுப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலி ஸார் கூறினர்.

இந்த பிரதேசத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அங்கு செல்வதை தவிர்த்து கொள்ளுமாறு பொது மக்களை அறிவுறுத்துவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-8)

## மோ.சைக்கிள்...

பெற்ற விபத்தில் பாடசாலை மாண வனொருவன் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி யில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் சுபேசன் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

அராலி - தெல்லிப்பழை பிர தான வீதியூடாக சென்று கொண்டி ருந்த போது மாவடியில் இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

தலைக்கவசத்தை கையில் கொளுவியபடி சென்றுகொண்டிந்த போது தலைகவசம் கைபிடிக்கும் எரிபொருள் தாங்கிக்கும் இடையில் அகப்பட்டமையினால் வளைவில் திருப்ப முடியாமல் எதிரே இருந்த மதில் சுவரோடு மோதியதால் விபத்து ஏற் பட்டு அவ்விடத்திலேயே உயிரிழந் ததாக தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## மாகாணசபை உறுப்...

7 வாகனங்களை வடக்குக்கு கொண்டுவர இந்தியா முடிவு செய்துள்ளது.

இதற்காக கொழும்பில் இருக்கும் வாகன இறக்கு மதி நிறுவனங்கள் 7 இடமிருந்து கூறுவிலை யைக் கோரியுள்ளது.

விரைவில் 7 நிறுவனங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதனூடாக வாகனங்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளது. இம்மாத இறுதிக்குள் அந்த வாகனங் கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங் கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-8)

## சாட்சியங்...

டுள்ளது.

சில வகையிலான சாட்சியங் களை கிடைக்கப்பெற காலஅவ காசம் தேவை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பேச்சாளர் ரொபர்ட் கொல்வில்லி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற் றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர் பிலான பல்வேறு சாட்சியங்கள் திரட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிட் டுள்ளார். (எ-8)

## தென்னிலங்கையில்...

விக்கின்றனர். இதன்காரணமாக கடற்கரையோரப் பகுதிகளில் கடற்கொந்தளிப்பு குறித்த அச்சம் பொது மக்களி டையே ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே தென்னிலங்கை கடற்பரப்பில்கடல்சீற்றம்அதிகமாக இருக்கும என்று வானிலை அவதான நிலையமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காற்றும் பலமாக வீசும் அபாயமுள்ளதால் சிறு சூறா வளிகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இடியுடன் கூடிய மழை காரணமாக கடலின் ஆர்ப்பரிப்பு அதிகரிக்கும் சாத்தியம் இருப்ப தாகவும் வானிலை அவதான நிலைய அறிக்கை தெரிவித் துள்ளது.

மேலும் காற்று இலக கற்று சுழன்றடிப்பதன காரணமாக மீனவர் கள் கடலுக்குச் செல வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப பட்டுள்ளார்கள். (எ-8)


ஆயிரங்கள் கடந்த பதிவுகள்

நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனை

உங்கள் கல்யாண மாலை

இலவச திருமண சேவையை நாடுங்கள்

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

Kalyanamalai.com

இணையத்தைப் பாருங்கள்

நிலைய நிர்வாக செலவிற்காக பதிவுக்கட்டணம் 1000 ரூபாய் மட்டுமே

தொடர்பு : கல்யாண மாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 720 1005

Email :- kalyanamalai.jaffna@gmail.com

அமெரிக்க அதிஸ்ட விசா

இன்றுடன்(03-11-2014) பதிவுகள் நிறைவடைகின்றன

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இந்த வருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இறுதி நாள் - உடனே விரையுங்கள்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு பதிவுகள் இடம்பெறும்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537

யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257

நெல்லியடி
மடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் ● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை

V2 Travels and Tours (Pvt) Ltd (C-8950)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101 (C-8946)

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

நேரடி முகவரிடம் ஒப்படைப்பதன் மூலம் காலதாமதத்தையும் அதிக கட்டணம் செலுத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) யாழ்ப்பாணம். 021 222 3536 (C-8937)

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.